# VETRII IAS STUDY CIRCLE

## TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## பிப்ரவரி - 2020

ISO 9001 : 2015

An ISO 9001 : 2015 Institution | Providing Excellence Since 2011


**Head Office**

Old No.52, New No.1, 9th Street, F Block, 1st Avenue Main Road,

(Near Istha siddhi Vinayakar Temple), Anna Nagar East – 600102.

**Phone: 044-2626 5326 | 98844 72636 | 98844 21666 | 98844 32666**

**Branches**

**SALEM**

No.189/1, Meyanoor Road, Near ARRS Multiplex, (Near Salem New bus Stand), Opp. Venkateshwara Complex, Salem - 636004.

**0427-2330307 | 95001 22022**

**KOVAI**

No.347, D.S.Complex (3rd floor), Nehru Street,Near Gandhipuram Central Bus Stand, Ramnagar, Kovai - 9

**75021 65390**

**Educarreerr Location**

**Vivekanandha Educational Institutions for Women,**

Elayampalayam, Tiruchengode - TK Namakkal District - 637 205.

**04288 - 234670 | 91 94437 34670**

**Patrician College of Arts and Science,**

3, Canal Bank Rd, Gandhi Nagar, Opposite to Kotturpuram Railway Station, Adyar, Chennai - 600020.


**044 - 24401362 | 044 - 24426913**

**Sree Saraswathi Thyagaraja College**

Palani Road, Thippampatti, Pollachi - 642 107

**73737 66550 | 94432 66008 | 90951 66009**

# இயக்குநர் வாழ்த்து மடல்



எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.
பொருள் :
ஒன்றை பற்றி நினைத்தவர் நினைத்தபடியே செயல்புரிவதில்
உறுதியடைந்தவராக இருந்தால் நினைத்தவாறு வெற்றியே பெறலாம்.

**என் அன்பிற்கினிய மாணவர்களுக்கு**

மேற்கண்ட வள்ளுவரின் வாய்மொழியினை மெய்பிக்க விடா முயற்சியுடன், கடினமாக உழைத்து நேர்மையான வழியில் மாணவர்கள் தங்கள் வெற்றியினை அடைய **வெற்றி ஆட்சிபணிகள் பயிற்சி நிறுவனம்** சரியான வழிகாட்டுதலுடன், தரமான பயிற்சியினை அளித்து ஒவ்வொரு மாணவரின் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி அவர்களின் குறிக்கோள்களை நிறைவு செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

நம் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு அனைத்து பாடத்திலும் அடிப்படை அறிவை தெளிவுபடுத்தும் வகையில் வகுப்புகள் நடத்தப்பட்டு அதனை விளக்கும் வகையில் நம்முடைய அனைத்து கையேடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலினை படித்து பயன்பெற மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துகளை உங்களுக்கு உரித்தாக்கி கொள்கிறேன்.

**மு. சண்முகம்**
இயக்குனர்
வெற்றி ஐ.ஏ.எஸ். பயிற்சி நிறுவனம்

---

*Published by*

**VETRII IAS STUDY CIRCLE**
F Block New No. 1, 9th Street, 1st Avenue main Road, Chinthamani, Anna Nagar (E), Chennai – 102.
Phone: 044 – 26265326 / 9600124042 / 9840097666
www.vetriias.com
E-Mail: vetriiias@gmail.com / vetriiias2011@gmail.com / vetriiias2018@gmail.com
Feedback: vetriiiasmaterials@gmail.com

© All rights reserved with the publisher. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the written permission of the publisher, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

# பொருளடக்கம்


1 **வரலாறு**




■முக்கிய தினங்கள் ■உலக அமைப்புகள் – உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள் ■பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம் ■சிறந்த நபர்கள் ■விளையாட்டு ■புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள் ■விருதுகள் மற்றும் கௌரவங்கள் ■கலாச்சாரம் ■சமீபத்திய வரலாற்று நகழ்வு ■இந்தியா மற்றும் அண்டை நாடுகள் ■நியமனங்கள்

13 **அரசியல் அறிவியல்**




■இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை ■சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள் ■பொதுத் தேர்தலில் நடக்கும் பிரச்சனைகள் ■அரசியல் கட்சிகள் மற்றும் இந்திய அரசியல் அமைப்புகள் ■மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

17 **புவியியல்**




■சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

20 **பொருளாதாரம்**




■புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை


23 அறிவியல்

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்
- ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு






27 தினசரி தேசிய நிகழ்வு




38 சர்வதேச நிகழ்வு






39 தமிழ்நாடு

# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| பிப்ரவரி 19 | மண் சுகாதார அட்டை தினம் | ▪ இந்தியா பிப்ரவரி 19, 2020 அன்று மண் சுகாதார அட்டை தினத்தை அனுசரித்தது. இத்திட்டம் கடந்த 2015ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.<br>▪ இந்நிகழ்ச்சியைக் குறிக்கும் வகையில், இயற்கை உரங்களைப் பயன்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. |
| பிப்ரவரி 20 | உலக சமூக நீதி தினம் | ▪ உலக சமூக நீதி தினம் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 20 அன்று கொண்டாடப்படுகிறது. இதன் முக்கிய நோக்கம் வறுமை ஒழிப்பு வேலையின்மை ஆகியவற்றை எதிர்கொள்வது ஆகும். இதன் மையக்கருத்து - Closing the Inequalities Gap to Achieve Social Justice. |
| பிப்ரவரி 21 | உலக தாய்மொழி நாள் | ▪ உலக தாய்மொழி தினம் பிப்ரவரி 21-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. மையக்கருத்து - Languages without Borders. |
| பிப்ரவரி 22 | உலக சிந்தனை தினம் | ▪ மையக்கருத்து - "Diversity, Equity and Inclusion". |
| பிப்ரவரி 24 | பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாள் | ▪ பெண் குழந்தைகளுக்காக மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆற்றிய உயர்ந்த சேவையை நினைவுகூரத்தக்க வகையில், ஒவ்வொரு ஆண்டும் அவரது பிறந்த நாளான பிப்ரவரி 24-ஆம் தேதி மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்படும்.<br>▪ மேலும் அரசு இல்லங்களில் வசிக்கும் ஆதரவற்ற பெண் குழந்தைகள் 21 வயதை நிறைவு செய்யும் போது அவர்களுக்கு ரூ.2 லட்சம் நிதி அளிக்கப்படும் என்று முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி அறிவித்தார். |

| | | |
|---|---|---|
| பிப்ரவரி 27 | புரத தினம் | ▪ நாடு முழுவதும் பொது சுகாதார முயற்சிகள் மேற்கொள்ளும் ஒரு பகுதியாக பிப்ரவரி 27 அன்று புரத தினம் இந்தியாவில் முதல்முறையாக கொண்டாடப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் புரதத்தால் ஏற்படும் உடல் ஆரோக்கியம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஆகும்.<br>▪ இதன் மையக்கருத்து - *Protein Mein Kya Hai.* |
| பிப்ரவரி 28 | தேசிய அறிவியல் தினம் | ▪ இந்திய விஞ்ஞானி சர்.சி.வி.ராமன் கண்டுபிடித்த “ராமன் விளைவு“ 1928-ஆம் ஆண்டு பிப்ரவரி 28-ஆம் தேதி உலகுக்கு அறிவிக்கப்பட்டது.<br>▪ ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 28-ஆம் தேதி தேசிய அறிவியல் தினமாக கொண்டாடப்படுகிறது. கடந்த 1986-ஆம் ஆண்டு முதல் இந்த தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. |

# 1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

### முதல் ஒருங்கிணைந்த முப்படை சேவை மையம் (First Integrated Tri-Service Command)



- முதல் முப்படை தளபதியான பிபின் ராவத் முதல் ஒருங்கிணைந்த முப்படை சேவை மையத்தை வரும் ஜுன் 2020ல் அமைக்க உள்ளார். இதன் தலைவராக ஏர் மார்ஷல் இருப்பார்.

### விமானத்திலிருந்து செலுத்தக்கூடிய ஏவுகணை: பாகிஸ்தான் சோதனை

- விமானத்திலிருந்து செலுத்தக் கூடிய தனது ‘ராட்-2’ ரக ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றிகரமாக பரிசோதித்துப் பார்த்தது.
- 300 கி.மீ. தொலைவிலுள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கவல்ல அந்த ஏவுகணைகளில், வழக்கமான வெடிபொருள்கள் மட்டுமன்றி, அணு ஆயுதங்களையும் பொருத்த முடியும்.
- 1,100 கிலோ எடை கொண்ட ராட்-2 ஏவுகணையை பாகிஸ்தான் முதல் முறையாக 2007-ஆம் ஆண்டு சோதித்தது.

### ராணுவ தலைமையாக கட்டிடத்துக்கு அடிக்கல்: “தால் சேனா பவன்”

- ராணுவத் தலைமையகம் தற்போது டெல்லி சவுத் பிளாக் பகுதியில் செயல்படுகிறது இந்நிலையில் டெல்லி கன்டோன்மென்ட் பகுதியில் மானெக்சா மையம் அருகில் புதிய தலைமையகம் கட்ட முடிவு செய்யப்பட்டது.”தால் சேனா பவன்” என்ற பெயரிலான ராணுவத்தலைமையக வளாகம் 39 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ளது.

### கடலோரக் காவல்படை ரோந்து கப்பல் “வஜ்ரா”

- சென்னையை அடுத்த காட்டுப்பள்ளியில் அமைந்துள்ள தனியார் துறைமுகத்தில் ரூ.188 கோடி செலவில் கட்டப்பட்ட இந்திய கடலோரக் காவல்படை ரோந்து கப்பலான ’வஜ்ரா’வின் வெள்ளோட்டத்தை மத்திய கப்பல் போக்குவரத்து, ரசாயனம் மற்றும் உரத்துறை இணை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தொடக்கி வைத்தார்.

- சென்னையை அடுத்த காட்டுப்பள்ளியில் எல் அன்ட் டி தனியார் கப்பல் கட்டும் தளம் உள்ளது. பாதுகாப்பு அமைச்சகத்துக்குத் தேவையான கப்பல்கள் இங்கு கட்டப்பட்டு வருகின்றன.
- குறிப்பாக கடற்படை, கடலோரக் காவல்படைக்குத் தேவையான ரோந்துக் கப்பல்கள், இடைமறிக்கும் படகுகள் உள்ளிட்டவை இங்கு தயாரிக்கப்பட்டு வருகின்றன.

## ஆறு MH-60R ஹெலிகாப்டர்கள் அமெரிக்காவிடம் இருந்து பெற உள்ளது

- இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே 3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள பாதுகாப்பு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் கீழ் இந்திய ஆயதப்படைக்காக அமெரிக்க பாதுகாப்பு 30 இராணுவ ஹெலிகாப்டர்கள் வாங்கப்பட உள்ளது.
- இந்திய கப்பற்படை 2.6 பில்லியன் டாலர் செலவில் ஆறு MH-60 (Romeo) ஹெலிகாப்டர்களை கொள்முதல் செய்வதும் இதில் அடங்கும். இந்த ஹெலிகாப்டர்கள் வரும் 2021 அம் ஆண்டுக்குள் இந்திய கப்பற்படை வாங்க உள்ளது.
- MH-60 ஹெலிகாப்டர்கள் பிரபலமாக “ROMEO” என்று அழைக்கப்படுகிறது. மேலும் இது கடலுக்கு ஆழமான நீர்மூழ்கி கப்பல்களை வேட்டையாடும் தன்மை கொண்ட ஹெலிகாப்டர் என்று அழைக்கப்படுகிறது.

## கடலோரக் கப்பல் படையில் இணைந்து புதிய ரோந்து கப்பல் “வரத்”

- கடலோரக் காவல்படைக்காக கட்டப்பட்ட “வரத்“ என்ற ரோந்து கப்பலை கப்பல் போக்குவரத்து, ரசாயனம் மற்றும் உரத்துறை இணை அமைச்சர் மன்சுக் மாண்டவியா நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- சென்னையை அடுத்த காட்டுப் பள்ளியில் உள்ள எல் அன்ட் டி தனியார் கப்பல் கட்டும் தளத்தில் பாதுகாப்பு அமைச்சகத்திற்குத் தேவையான ரோந்து கப்பல்கள், அதிவேக இடைமறிக்கும் படகுகள் கட்டப்பட்டு வருகின்றன.
- கடந்த 2015-ஆம் ஆண்டு 7 ரோந்து கப்பல்கள் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் பாதுகாப்பு அமைச்சகமும் எல் அண்ட் டி நிறுவனமும் மேற்கொண்டன.
- இதனையடுத்து கடந்த ஐந்து ஆண்டுகளில், வரத், வஜ்ரா எனப் பெயரிடப்பட்ட ஆறு ரோந்து கப்பல்கள் கடலோரக் காவல் படையிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன.

# 1.3 உலக அமைப்புகள் - உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

### குழந்தைகள் வாழத் தகுதியான நாடுகள்




- உலக சுகாதார நிறுவனம், யுனிசெஃப், லான்செட் மருத்துவ இதழ் ஆகியவை இணைந்து குழந்தைகள் வாழத் தகுதியான நாடுகளின் பட்டியலைத் தயார் செய்யும் பணியில் ஈடுபட்டன.
- மொத்தம் 180 நாடுகளில் இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.
- ஒவ்வொரு நாட்டிலும் வெளியிடப்படும் கரியமிலவாயுவின் அளவை அடிப்படையாகக் கொண்டு ஒரு பட்டியலும், குழந்தைகளின் சுகாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு மற்றொரு பட்டியலும் தயாரிக்கப்பட்டது.
- நாடுகள் வெளியிடும் கரியமில வாயு அடிப்படையிலான பட்டியலில் இந்தியா 77-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.
- குழந்தைகள் வாழத் தகுதியான நாடுகள் பட்டியலில் சர்வதேச அளவில் இந்தியா 131-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.
- சுகாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட பட்டியலில் நார்வே, தென் கொரியா, நெதர்லாந்து ஆகியவை முதல் மூன்று இடங்களில் உள்ளன.
- மத்திய ஆப்பிரிக்க குடியரசு, சாட், சோமாலியா ஆகியவை கடைசி மூன்று இடங்களில் உள்ளன.


### உலகளாவிய எதிர்கால கல்வி குறியீடு

- உலகளாவிய எதிர்கால கல்வி குறியீடு 2019 பட்டியலில் இந்தியாவின் தரநிலை 35வது இடத்தில் உள்ளது.
- இந்த பட்டியலை பொருளாதார நிபுணர் புலனாய்வு பிரிவு மற்றும் யிதான் என்ற அறக்கட்டளை வெளியிட்டது. கடந்த ஆண்டு இப்பட்டியலில் இந்தியா 40வது இடத்தில் இருந்தது.

| தரநிலை | நாடுகள் |
|---|---|
| 1 | பின்லாந்த் |
| 2 | ஸ்வீடன் |
| 3 | நியூஸ்லாந்த் |
| 35 | இந்தியா |

# 1.4 சிறந்த நபர்கள்

### இந்தியாவின் இரண்டாவது பணக்கார நிறுவனம்: D'Mart




- இந்தியாவின் முதல் பணக்காரரான முகேஷ் அம்பானிக்கு அடுத்ததாக D'Mart நிறுவனத்தின் தலைவரான ராதா கிருஷ்ணன் இந்தியாவின் இரண்டாவது பணக்காரர் இடத்தை பெற்றுள்ளார். போர்ஃப்ஸ் இதழ் வெளியிட்டுள்ள 'Real Time Billionaires' பட்டியலில்$17.8 பில்லியன் டாலர்களை சொத்துடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

### அம்பாலா நகர பேருந்து நிலையத்திற்கு சுஷ்மா சுவராஜ் பெயர்

- ஹரியானா மாநில முதல்வர், மனோகர் லால் கத்தார், அம்மாநிலத்தில் உள்ள அம்பாலா நகர பேருந்து நிலையத்திற்கு முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அவர்களின் பெயர் சூட்டடப்பட்டு உள்ளதாக தெரிவித்தார்.

### ஐடிஎஸ்ஏ பாதுகாப்பு ஆய்வு நிறுவனத்துக்கு மனோகர் பாரிக்கர் பெயர்



- மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கி வரும் பாதுகாப்பு கல்வி மற்றும் ஆய்வு நிறுவனத்துக்கு ஐடிஎஸ்ஏ (IDSA Institute for Defence Studies and Analyses) மனோகர் பாரிக்கர் பெயரை மத்திய அரசு சூட்டியுள்ளது.
- மறைந்த பாதுகாப்புத்துறை அமைச்சர் மனோகர் பாரிக்காரின் அர்ப்பணிப்பு உணர்வை நினைவுகூரும் வகையில் இந்த பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

### சுபாஷ் சந்திர போஸ் உறவினர் கிருஷ்னா போஸ் மறைவு



- மேற்கு வங்கத்தில் கல்வியாளரும், திரிணமூல் காங்கிரஸ் முன்னாள் எம்.பி.யுமான கிருஷ்ணா போஸ் காலமானார்.
- இவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் உறவினர் ஆவார்.
- 'நேதாஜி: எ பயோகிரஃபி ஃபார் தி யங்' என்கிற வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் உள்பட பல்வேறு புத்தகங்களை கிருஷ்ணா போஸ் எழுதியுள்ளார்.

### 'HAPPINESS CLASS'



- இரண்டு நாள் பயணமாக வந்த அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் மனைவியான மெலானியா டிரம்ப் (Melania Trump) டெல்லியில் உள்ள அரசு பள்ளியில் 'Happiness Class' என்ற வகுப்பு பிரிவில் பங்கேற்றார். இந்த 'Happiness Class' என்பது மொழி, கலையறிவு, கலை முறையில் கற்றல் அடிப்படையில் குழந்தைகளுக்கு பாடம் கற்றுதருதல். 'Happiness Class'-ஐ பார்வையிட்ட முதல் அமெரிக்க பெண் மெலானியாடிரம்ப் என்பது குறிப்பிடத்தக்கது.

### புதிய நத்தை இனத்துக்கு கிரேட்டா துன்பர்க் பெயர்



- ஆசியாவில் அண்மையில் கண்டறியப்பட்ட புதிய நத்தை இனத்துக்கு சுற்றுச்சூழல் ஆர்வலர் சிறுமி கிரேட்டா துன்பர்க்கின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- இதுவரை பட்டியலிடப்படாத நத்தை இனம் ஒன்றினை நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த பரிணாம வளர்ச்சி ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.
- நிலத்தில் வாழும் தன்மையுடைய இந்த புதிய நத்தை இனத்துக்கு அவர்கள் "க்ராஸ்பெடோட்ராபிக் கிரேட்டா துன்பர்க்" என பெயர் சூட்டியுள்ளனர்.
- பருவநிலை மாறுபாட்டை சரிசெய்வதற்காக ஸ்வீடனைச் சேர்ந்த 17 வயது சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரேட்டா துன்பர்க் ஆற்றி வரும் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக புதிய நத்தை இனத்துக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### மிகவும் வயதானவராக கூறப்பட்ட சுதாகர் சதுர்வேதி காலாமானார்

- கர்நாடக மாநிலம் துமக்கூருவை சேர்ந்தவர் சுதாகர் கிருஷ்ண ராவ். கடந்த 1897-ம் ஆண்டு ஏப்ரல் 20-ம் தேதி இவர் பிறந்ததாக ஊடகங்களில் செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இதனால் இந்தியாவில் மிகவும் வயதானவராக இவர் கருதப்பட்டார். இவர் ஹரித்துவாரில் உள்ள குருகுலத்தில் நான்கு வேதங்களையும் கற்றுத் தேர்ந்து, 'சதுர்வேதி' என பட்டம் பெற்றார்.
- தொடக்கத்தில் ஆரிய சமாஜத்தில் இணைந்த சுதாகர் சதுர்வேதி பின்னர் காந்தியுடன் இணைந்தார். காந்தியின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, அவரது சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றார்.
- கடந்த 1919-ம் ஆண்டு ஏப்ரல் 13-ம் தேதி நடந்த ஜாலியன்வாலா பாக் படுகொலை உட்பட பல்வேறு சுதந்திர கால சம்பவங்களை நேரில் கண்ட சாட்சியாக விளங்கினார்.
- முதுமை காரணமாக பெங்களூருவில் உள்ள ஜெயநகரில் வசித்த சுதாகர் சதுர்வேதி காலமானார்.

# 1.5 முக்கிய இடங்கள்

### 8000 ஆண்டுகள் பழமையான கார்பன் படிமங்கள்



- சீனாவை சேர்ந்த ஓஷன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தென் சீன கடல் பகுதியில் உள்ள யங்லே நீல துளை எனப்படும் உலகின் மிக ஆழமான பகுதியில் 8000 ஆண்டுகள் பழைமையான கார்பன் படிமங்களை கண்டறிந்துள்ளனர்.

# 1.5 விளையாட்டு

### "கர்நாடக உசேன் போல்ட்" என அழைக்கப்படும் கம்பளா விளையாட்டு வீரருக்கு ஒலிம்பிக் பயிற்சி



- கர்நாடகாவின் கடலோர மாவட்டங்களில் அறுவடைக்கு பின் "கம்பளா" என்ற எருமை பந்தயம் பிரபலமானது.
- சேறும் சகதியுமான வயலில் நீர்த்தெறிக்க யார் முதலில் இலக்கை அடைகிறாரோ அவரே வெற்றியாளர் என அழைக்கப்படுவார்.
- ஸ்ரீநிவாஸ் கவுடா என்பவர் தனது எருமை மாடுகளுடன் 142.50 மீட்டர் தொலைவு 13.62 வினாடிகளில் கடந்தார்.
- உசேன் போல்ட் ஒலிம்பிக் போட்டியில் 100 மீட்டரை 9.55 வினாடிகளில் ஓடி கடந்திருக்கிறார். அவருடன் ஒப்பிடும் போது ஸ்ரீநிவாஸ் கவுடா வேகமாக ஓடி, உசைன் போல்ட் சாதனையை முறியடித்துவிட்டார்" என தகவல் வெளியானது.
- கர்நாடக உசேன் போல்ட் என அழைக்கப்படும் கம்பளா வீரருக்கு ஒலிம்பிக் பயிற்சி அளிக்க தயார் என மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

### தேசிய சீனியர் ஸ்குவாஷ் ஜோஷ்னா, சௌராவுக்கு சாம்பியன் பட்டம்

- சென்னை ஐஎஸ்ஏ அகாதெமியில் 77-ஆவது தேசிய சீனியர் போட்டிகள் நடைபெற்று வந்தன.
- இதில் தேசிய சீனியர் ஸ்குவாஷ் போட்டியில் தமிழகத்தின் ஜோஷ்னா, சின்னப்பா, சௌரவ் கோஷல் ஆகியோர் மீண்டும் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினர்.

### லாரியஸ் விருது வென்ற சச்சின்



- 20 ஆண்டுகளின் சிறந்த விளையாட்டுத் தருணத்துக்கான லாரியஸ் விருது வழங்கி சச்சின் டெண்டுல்கர் கௌரவிக்கப்பட்டார்.
- 2011 உலகக் கோப்பை வெற்றிக்குப் பின்னர் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரை சக வீரர்கள் தோளில் சுமந்து மைதானத்தை வலம் வந்த தருணம், விளையாட்டு உலகில் 20 ஆண்டுகளின் சிறந்த தருணமாகத் தேர்வு செய்யப்பட்டு டெண்டுல்கருக்கு லாரியஸ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

### கேன்ஸ் செஸ்: கோனொரு ஹம்பி சாம்பியன்

- அமெரிக்காவில் நடைபெற்றுவந்த கேன்ஸ் கோப்பை செஸ் போட்டியில் 9 சுற்றுகள் முடிவில் 6 புள்ளிகளுடன் இந்திய வீராங்கனை கோனேரு ஹம்பி முதலிடம் பிடித்தார்.
- கடந்த 2019 டிசம்பர் மாதம் உலக ராபிட் செஸ் சாம்பியனானார் என்பது குறிப்பிடத்தக்கது.

### இந்தியாவுக்கு வெண்கலம்: ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி

- புது தில்லியல் நடைபெற்று வரும் ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியின் ஒரு பகுதியாக நடைபெற்ற கிரேக்கோ ரோமன் 67 கிலோ எடைப்பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய வீரர் அஷு.

### 2022 ஆசிய கால்பந்து போட்டி இந்தியா நடத்த உள்ளது

- ஆசிய கால்பந்து கூட்டமைப்பின் பெண்கள் கமிட்டி, 2022-ம் ஆண்டுக்கான ஆசிய கோப்பை பெண்கள் கால்பந்து போட்டியை நடத்தும் உரிமையை இந்தியாவுக்கு வழங்குவதாக அறிவித்தது.
- இந்த போட்டியை நவிமும்பை, ஆமதாபாத், கோவா ஆகிய இடங்களில் நடத்த திட்டமிட்டு இருப்பதாக இந்திய கால்பந்து சங்கம் தெரிவித்து இருந்தது. போட்டி அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடத்தப்பட இருக்கிறது.

### ஆசிய மல்யுத்தம்: இந்தியாவுக்கு 3 தங்கம்

- புது தில்லியில் ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.
- ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா 3 தங்கம் உள்பட 1 வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியது.

| ஆசிய மகளிர்க்கான எடை பிரிவு | வென்றவர் |
|---|---|
| 68 | திவ்யா |
| 59 | சரிதா மோர் |
| 57 | பிங்கி |

### 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டி




- 2020ஆம் ஆண்டின் டோக்கியோ ஒலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற உள்ளது. டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் குழு மற்றும் பாரா ஒலிம்பிக் விளையாட்டு 2020ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கான மையக்கருத்தை வெளியிட்டது. “United By Emotion” என்பது 2020 ஒலிம்பிற்கான மையக்கருத்து. வரும் ஜுலை 24 முதல் ஆக்ஸ்ட் 9 வரை இப்போட்டிகள் நடைபெற உள்ளது.

**ஆசிய மல்யுத்தம் தங்கம் வென்றார் ரவி தாஹியா**




- ரவிக்குமார் தாஹியா தங்கம் வென்றார்.
- மேலும் பஜ்ரங் புனியா, கௌரவ் பாலியான், சத்யவிரத் கடியன் ஆகியோர் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

**கேன்ஸ் செஸ் சாம்பியன் குகேஷ்**



- பிரான்ஸின் கேன்ஸ் நகரில் நடைபெற்ற கேன்ஸ் ஓபன் செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றார் இந்தியாவின் 13 வயது கிராண்ட்ஸ் மாஸ்டர் டி.குகேஷ்.

**முதல் கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டு**

- கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் ஒடிஸாவில் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு போட்டிகள் தொடங்கியது. இப்போட்டிகள் பிப்ரவரி 22 – மார்ச் 1 வரை நடைபெற உள்ளது. இப்போட்டிகளை காணொலி காட்சி மூலம் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

**2020-ல் வில்வித்தை போட்டியை இந்தியாவில் நடத்த ஒப்புதல்**

- வரும் 2022இல் காமன்வெல்த் துப்பாக்கி சுடுதல், வில்வித்தை போட்டிகளை இந்தியாவின் சண்டீகரில் நடத்த காமன்வெல்த் விளையாட்டு கூட்டமைப்பு (சிஜிஎப்) ஒப்புதல் தெரிவித்துள்ளது.
- இந்நிலையில் வரும் 2022-இல் இங்கிலாந்து பர்மிங்ஹாம் நகரில் காமன்வெல்த் போட்டிகள் நடக்கின்றன.
- 2022 ஜனவரி மாதம் சண்டீகர் நகரில் இரு போட்டிகளும் நடத்தப்படும். பர்மிங்ஹாமில் ஜூலை 27 முதல் ஆகஸ்ட் 7 வரை காமன்வெல்த் போட்டிகள் நடத்தப்படும்.

**ரஷ்ய டென்னிஸ் நட்சத்திரம்-மரியா ஷரபோவா**




- ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 2004ம் ஆண்டு விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வென்று மகத்தான சாதனை படைத்த ஷரபோவா, இது வரை 5 கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள் வென்றுள்ளார்.
- தோள்பட்டை காயம் உட்பட பல்வேறு காயங்களால் இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் தடுமாறி வந்தார். இந்த நிலையில், டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

**ஆசியான் சிறந்த ஸ்குவாஷ் வீரர் விருது**

- ஆசிய ஸ்குவாஷ் கூட்டமைப்பு சார்பில் 2019ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரராக தேசிய சாம்பியனும், சென்னை வீரருமான சௌரவ் கோஷல் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**கேலோ இந்தியா தங்க மகன்**


- ஒடிஸா மாநிலம் புவனேசுவரத்தில் நடைபெற்று வரும் கேலோ இந்தியா விளையாட்டு போட்டியின் ஒரு பகுதியாக தடகளத்தில் 400 மீ. ஓட்டத்தில் தங்கப்பதக்கம் வென்ற சென்னை பல்கலைக்கழக வீரர் ஆர். ராஜேஷ்.

# 1.6 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

**“லெட் மி ஸே யிட் நவ்” (Let me say it now)**

- *மும்பை காவல் ஆணையராக இருந்த ராகேஷ் மரியா அண்மையில் ‘லெட் மி ஸே யிட் நவ்’ (Let me say it now) எனத் தலைப்பிடப்பட்ட புத்தகத்தை வெளியிட்டார்.*

**மான்டெக் சிங் அலுவாலியா: நூல்**





- *மத்திய திட்டக்குழுவின் துணைத் தலைவராக இருந்தவர் மான்டெக் சிங் அலுவாலியா, ‘பேக்ஸ்டேஜ்: தி ஸ்டோரி பிஹைண்ட் இண்டியா’ஸ் ஹை குரோத் இயர்ஸ்’ என்ற நூலை எழுதியுள்ளார்.*

**The Magnificent Heritage of South India**


- *மெட்ராஸ் இசை அகாடமியின் தலைவர் என்.முரளி (N. Murali) The Magnificent Heritage of South India என்ற புத்தகத்தை வெளியிட்டார். தென் இந்திய பாரம்பரிய திட்ட நிகழ்வின் ஒரு பகுதியாக இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.*

**“who is bharatmata” புத்தகம் வெளியிடு**





- *இந்தியாவின் முன்னாள் பிரதமரான மன்மோகன் சிங் அவர்கள் “who is bharatmata” என்ற ஆங்கில புத்தகத்தை வெளியிட்டார். பேராசிரியர் புருஷோத்தமன் அகர்வால் அவர்கள் எழுதியுள்ளார். மேலும் கன்னட மொழி எழுத்தாளரான கே.ஆர். ராதாகிருஷ்ணன் “Yaaru Bharat Maate” என்ற பெயரில் கன்னட மொழியில் மொழிபெயர்த்து உள்ளார்.*

**“Death - An Inside Story: A book for all those who shall die”**




- *இந்திய துணை குடியரசுத் தலைவரான வெங்கய்யா நாயுடு ‘Death-An Inside Story’ என்ற புத்தகத்தை வெளியிட்டார். கோவையில் உள்ள ஈஷா யோகா மையத்தில் நடைபெற்ற 26வது மஹா சிவராத்திரி நிகழ்ச்சியில் வெளியிட்டார்.*

**“பைட்டிங் தி புல்லட்-மெமரீஸ் ஆப் எ போலீஸ்“**




- *டெல்லி போலீஸ் கமிஷனராக 2000-ம் ஆண்டில் இருந்தவர் அஜய் ராஜ் சர்மா. பணியிலிருந்து ஓய்வு பெற்ற நிலையில் தற்போது ”பைட்டிங் தி புல்லட்-மெமரீஸ் ஆப் எ போலீஸ்” என்ற பெயரில் ஒரு புத்தகத்தை அஜய் ராஜ் சர்மா எழுதியுள்ளார்.*

**இந்திய பட்ஜெட் 2020**

- *மத்திய சுற்றுச்சூழல் காடுகள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் ஸ்ரீ பிரகாஷ் ஜவாடேகர் “The Reference Annual- India/Bharat-2020”-ன் 64வது பதிப்பை வெளியிட்டார். இது ஹிந்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் (e-version) வெளியிடப்பட்டது.*

# 1.7 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### 2019 ஆண்டின் சிறந்த தொழில் முனைவோர் விருது

- பெங்களூரைச் சேர்ந்த மருந்து தயாரிக்கும் நிறுவனமான பயோகானின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான கிரண் மஜீம்தார் ஷா அவர்களுக்கு மலிவு விலையில் மருந்துகளை வழங்கியதற்காக ஆண்டின் சிறந்த தொழில் முனைவோர் விருது வழங்கப்பட உள்ளது

### Miss Diva Universe 2020




- மங்களூரைச் சேர்ந்த அட்லினேகாஸ்டேலினோ அவர்கள் Miss Diva Universe 2020 என்ற பட்டத்தை வென்றுள்ளார். மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இப்பட்டம் வழங்கப்பட்டது.

### தமிழ் எழுத்தாளர் சோ.தருமன் உள்பட 24 பேருக்கு சாகித்ய அகாதெமி விருது

- தமிழ் எழுத்தாளர் சோ.தருமன் உள்ளிட்ட இந்திய மொழிகளைச் சேர்ந்த 24 எழுத்தாளர்களுக்கு சாகித்ய அகாதெமி விருது வழங்கப்பட்டது.
- சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கான 2019-ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருது வழங்கும் விழா தில்லி கமானி அரங்கில் நடைபெற்றது.
- தமிழ் எழுத்தாளர் சோ.தருமனுக்கு சாகித்ய அகாதெமி விருதை அதன் தலைவர் சந்திரசேகர் கம்பார் வழங்கினார்.
- சோ. தருமனின் 'சூல்' என்ற நாவலுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- இதேபோல, பிரபல ஆங்கில மொழி எழுத்தாளரும், காங்கிரஸ் எம்பியுமான சசி தரூருக்கு சாகித்ய அகாதெமி விருது வழங்கப்பட்டது. அவர் எழுதிய 'அன் எரா ஆஃப் டார்க்னஸ்' என்ற நூலுக்காக இந்த விருது வழங்கப்பட்டது.
- சாகித்ய அகாதெமி விருது கிடைத்த 'சூல்' நாவலை மழையை மட்டுமே நம்பி விவசாயம் பார்க்கும் கரிசல் பூமியை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது.

### கே.வி.ஜெயஸ்ரீக்கு சிறந்த மொழிப் பெயர்ப்புக்கான விருது

- சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதெமி விருதுக்கு கே.வி.ஜெயஸ்ரீ தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- "நிலம் பூத்து மலர்ந்த நாள்" என்ற மனோஜ் குருவின் மலையாள நூலை மொழி பெயர்த்ததற்காக கே.வி.ஜெயஸ்ரீக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- திருவண்ணாமலையை அடுத்த சு.கீழ்நாச்சிப்பட்டு கிராமத்தைச் சேர்ந்தவர் கே.வி.ஜெயஸ்ரீ.

# 1.8 இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

### ஆசிய வணிக மற்றும் சமூக முதலீட்டாளர்கள் மன்ற மாநாடு

- ஆசிய வணிக மற்றும் சமூக முதலீட்டாளர்கள் மன்றத்தின் 13வது பதிப்பு தாய்லாந்து நாட்டின் தலைநகரான பேங்காக்கில் நடைபெற்றது. இங்கு ஆசியாவின் சிறந்த பிராண்டுகள் மற்றும் தலைவர்கள் சந்திப்பின் நான்காவது பதிப்பு நடைபெற்றது. மாநாட்டின் முக்கிய நோக்கம் இந்தியா மற்றும் ஆசியாவில் முதலீட்டை மேம்படுத்துவது ஆகும்.

# 1.9 நியமனங்கள்

### பிரதமரின் புதிய ஆலோசகர்கள் நியமனம்

- பிரதமர் நரேந்திர மோடியின் ஆலோசர்களாக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அமர்ஜீத் சின்ஹா மற்றும் பாஸ்கர் குல்பே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- அமைச்சரவையின் நியமனக் குழு பிரதமர் அலுவலகத்தில் (பி.எம்.ஓ) நியமனங்கள் மற்றும் செயலாளர் பதவிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

# 1.10 கலாச்சாரம்

### தேசிய இயற்கை உணவு திருவிழா

- தேசிய இயற்கை உணவு திருவிழா இந்திய அரசு டெல்லியில் உள்ள நேரு உள்விளையாட்டு அரங்கில் நடத்தியது. உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சர் ஹர்சிம்ராத் கவுர் படேல் அவர்கள் தொடங்கி வைத்தார்.




- இந்நிகழ்ச்சி மூன்று நாட்கள் நடைபெற்றது. முதல்முறையாக இயற்கை உற்பத்தி மற்றும் பெண்கள் தொழில் முனைவோர்களால் உற்பத்தி செய்யப்படும் இயற்கை உணவுகள் ஊக்குவிக்க இத்திருவிழா ஏற்பாடு செய்துள்ளது.
- இதன் மையக்கருத்து - *Unleashing India's Organic Market Potential.*

### சாந்த் சேவாலால் ஜெயந்தி

- கர்நாடக மாநிலம் பெலகாவியில் சேவாலால் ஜெயந்தி தொடங்கியது. 18ம் நூற்றாண்டைச் சேர்ந்த பங்சாரா பிரிவைச் சேர்ந்த துறவியான சாந்த் சேவாலால் நினைவாக இந்த விழா நடைபெற்று வருகிறது.
- கர்நாடக மாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் சசிகலா அண்ணாசாகேப் ஜோலே தொடங்கி வைத்தார்.

### பழங்குடியின மகோற்சவ் விழா (Tribal Mahotsav)

- மத்தியப் பிரதேச மாநிலம் மண்ட்லா மாவட்டம் ராம்நகரில் 'பழங்குடியின மகோற்சவ' விழா நடைபெற்றது.
- இரண்டு நாள்கள் நடைபெறும் இந்த விழாவை குடியரசு துணைத்தலைவர் வெங்கய்ய நாயுடு தொடக்கிவைத்தார்.

### Lui-Ngai-Ni: விதைகள் கண்காட்சி

- மணிப்பூரைச் சேர்ந்த நாகா பழங்குடியினர்கள் லு-நகாய்-நி என்ற விதை விதைப்பு விழாவை *(Seed Sowing Festival)* கொண்டாடினர். இத்திருவிழா மணிப்பூர் மாநிலத்தின் உக்ஹருள் என்ற இடத்தில் கொண்டாடப்பட்டது.
- இரண்டு நாள் திருவிழாவை அம்மாநில பழங்குடியினர் மேம்பாட்டுத்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார். இதன் மையக்கருத்து *"Oneness through Culture"* என்பதாகும்.

### கயக் திருவிழா

- உத்தரகாண்ட் மாநிலத்தில் கங்கா கயக் திருவிழா கொண்டாடப்பட்டது. கங்கா கயக் திருவிழா என்பது ஒரு படகு போட்டியாகும். இத்திருவிழாவை உத்தரகாண்ட் அமைச்சர் வினோத் கந்தாரி அவர்கள் தேவ்பிரயாக் என்ற இடத்தில் துவங்கி வைத்தார்.

**வேலூர் மாவட்டத்தில் புதிய கற்கால சாம்பால் மேடு கண்டுபிடிப்பு**



- வேலூர் மாவட்டம், குடியாத்தம் அடுத்த வலசை கிராமத்தின் சந்தூர் மலையடிவாரத்தில் 2 இடங்களில் சாம்பல் மேடுகள் கண்டறியப்பட்டன.
- தமிழகத்தில் முதல் முறையாக கண்டறியப்பட்ட இந்த சாம்பல் மேடு புதிய கற்காலத்தைச் சேர்ந்தது என தெரியவந்துள்ளது.
- இந்தியாவில் புதிய கற்கால சாம்பல் மேடுகள் ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களில் மட்டுமே அதிகம் கண்டறியப்பட்டள்ளன தமிழ்நாட்டில் முதல் முறையாக வேலூர் மாவட்டத்தில் வலசை கிராமத்தில் கண்டறியப்பட்டுள்ளது.

**பாரத் -பங்களா பரியதன் உட்சவ்**

- சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக பாரத்-பங்களா பரியதன் உட்சவ் விழாவின் முதல் பதிப்பு திரிபுராவின் தலைநகரான அகர்தலாவில் தொடங்கி வைக்கப்பட்டது.
- 1971-ஆம் ஆண்டு வங்காள நாட்டின் விடுதலை போரில் திரிபுராவின் பங்களிப்பிற்காகவும் மற்றும் திரிபுராவின் சுற்றுலாத் துறையை உயர்த்துவதற்காகவும் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**லோசர் திருவிழா**

- இமாச்சலபிரதேச மாநிலத்தில் உள்ள தர்மசாலாவில் லோசர் திருவிழா (Losar Festival) கொண்டாடப்பட்டது. லோசர் திருவிழா என்பது திபெத்திய மக்களின் புதிய நாள்காட்டி அல்லது திபெத்திய புத்தாண்டு கொண்டாட்டமாகும்.
- லோசர் திருவிழா என்பது திபெத்திய புத்த துறவிகளின் கொண்டாட்டமாகும்.

# 1.11 சமீபத்திய வரலாற்று நிகழ்வு

**பாகுபலியின் "கிளிக்கி" மொழி (Kiliki language)**

- முற்றிலும் புதிதாக ஒரு மொழியை உருவாக்கியிருக்கிறார். பாடலாசிரியர் மதன் கார்க்கி. பாகுபலி படத்தில் காளகேயர்கள் பயன்படுத்தும் "கிளிக்கி" மொழியை இலக்கண விதிகளோடு முழுவதுமாக உருவாக்கியிருக்கிறார்.
- ஹாலிவுட்டில் இந்த மாதிரிப் படங்கள் அல்லது நாடக வரிசைக்கென்றே தனியாக மொழியை உருவாக்குவார்கள். இந்தியாவில் பாகுபலியில்தான் முதன் முதலாக இவ்வாறான ஒரு முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

**திருப்புவனம் அருகே முதுமக்கள்தாழி கண்டெடுப்பு**

- கீழடியில் 6 ஆம் கட்ட அகழாய்வுப் பணியை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி கடந்த 19 ஆம் தேதி தொடங்கி வைத்தார். 6 ஆம் கட்ட அகழாய்வு பணியின் போது கீழடி மற்றும் இதன் அருகேயுள்ள கொந்தகை, மணலூர், அகரம் ஆகிய கிராமங்களிலும் அகழாய்வு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது கீழடியில் அகழாய்வுக்காக குழிகள் தோண்டும் பணி நடந்து வருகிறது.
- இப்பணியை மேற்கொண்டிருந்த தொழிலாளர்கள் பானை போல் ஒரு பொருள் இருந்ததைக் கண்டெடுத்தனர்.
- அது பழங்காலத் தமிழர்கள் பயன்படுத்திய முதுமக்கள்தாழி என்று தொல்பொருள் ஆய்வு துறையினர் தெரிவித்தனர்.




## 2.1 சமீபத்திய நீதிமன்றத் தீர்ப்புகள்

**மாஜிஸ்திரேட், சிவில் நீதிபதிகள் நேரடி நியமனம் மூலம் மாவட்ட நீதிபதிகளாக முடியாது**

- *மாவட்ட நீதிபதி பதவிக்கான நேரடி நியமனத்துக்கு 7 ஆண்டுகளுக்கு குறையாத பணி அனுபவம் கொண்ட வழக்குரைஞர்களுடன், மாஜிஸ்திரேட்டுகள், சிவில் நீதிபதிகள் உள்ளிட்ட ஏற்கெனவே பணியில் இருக்கும் நீதித்துறை அதிகாரிகளும் போட்டியிடலாம் என்று பாட்னா உயர்நீதிமன்றம் கடந்த 2016-இல் தீர்ப்பு வழங்கியிருந்தது. இந்த தீர்ப்புக்கு எதிரான தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.*
- *தற்போது நேரடி நியமனத்தின் மூலம் மாவட்ட நீதிபதிகளாக நியமனம் பெற்ற மாஜிஸ்திரேட்டுகள், சிவில் நீதிபதிகள் ஆகியோர், தங்களது முந்தைய பணிகளுக்கே திரும்ப வேண்டியிருக்கும் என்று உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.*

**ராணுவதத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கு உரிமை**

- *ராணுவத்தில் ஆண்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் அனைத்தும் பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது..*
- *ராணுவத்தில் சேவையாற்றி வரும் பெண்களை 3 மாதங்களுக்குள் நிரந்தரமாக்க வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் கெடு விதித்துள்ளது.*
- *ராணுவத்தில் கடந்த 1992-ஆம் ஆண்டு முதல் பெண்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.*

**குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிராக தீர்மானம்**

- *தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ஜனதாதள கட்சியின் தலைவர் நிதிஷ்குமார் தலைமையிலான பீகார் அரசு குடியுரிமை திருத்த சட்டம் மற்றும் தேசிய மக்கள் தொகை பதிவேட்டிற்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.*

**பிரதான் மந்திரி கிஷான் சம்பதா யோஜனாவின் கீழ் 32 திட்டங்கள் இணைப்பு**

- *பிரதான் மந்திரி கிஷான் சம்பதா யோஜனாவின் கீழ் 32 திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அமைச்சர்களுக்கு இடையேயான குழு ஒப்புதல் அளித்து உள்ளது. மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சர் ஹர்சிமத் கௌர் படால் இந்த தகவலை தெரிவித்தார்.*

# 2.2 மத்திய அரசாங்கம் - பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

### சொந்த தொகுதியில் வாக்களிக்க புதிய தொழில்நுட்பம்

- வாக்காளர்கள் தாங்கள் இருக்கும் இடத்தில் இருந்தே, சொந்த தொகுதியில் வாக்களிக்கும் புதிய தொழில் நுட்பத்தை இந்திய தேர்தல் ஆணையம், சென்னை ஐஐடியுடன் இணைந்து உருவாக்க உள்ளது.
- இந்தியா உள்ளிட்ட சில நாடுகளைத் தவிர இதர நாடுகள் இணையதளம் வாயிலாக, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தங்கள் வாக்குகளை செலுத்தும் வசதியை வாக்காளர்களுக்கு அளிக்கின்றன.
- இந்த தொழில்நுட்ப உருவாக்கம் ஆராய்ச்சி நிலையில்தான் உள்ளது. பிற துறைகளின் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி, ஆணையத்தின் தற்போதைய விதிகளில் திருத்தம் செய்யப்படும். அதன்பின்னரே வாக்களிக்க அனுமதியளிக்கப்படும்.

### பசல் பீமா யோஜனா தேசிய மாநாடு

- பிரதான் மந்திரி பசல் பீம யோஜனாவின் நான்காவது தேசிய மாநாடு ராஜஸ்தான் மாநில உதய்பூரில் நடைபெற்றது. இந்த மாநாட்டை மத்திய வேளாண்மை மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகம் ஏற்பாடு செய்தது.
- பிரதான் மந்திரி பசல் பீம யோஜனா
- இத்திட்டம் கடந்த 2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- இத்திட்டம் தேசிய விவசாய காப்பீடு திட்டத்திற்கு மாற்றாக கொண்டு வரப்பட்டது.
- இதன் கீழ் விவசாயிகளின் காரிஃப் பயிர்களுக்கு 2% மற்றும் ராபி பயிர்களுக்கு 1.5% காப்பீடு வழங்குகிறது.
- இத்திட்டம் ஒரு நாடு–ஒரு திட்டம் கீழ் செயல்படுத்தப்பட உள்ளது.

**பயிர்க் காப்பீடு திட்டத்தில் மாறுதல்கள்:**

- பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (பி.எம்.எஃப்.பி.ஒய்) திட்டத்தை வானிலை அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டு திட்டமாக மறுசீரமைக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

### தூய்மை இந்தியா திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிக்கு ஒப்புதல்

- தூய்மை இந்தியா திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிகள் செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதன் நோக்கம் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நாடாக இந்தியாவை உருவாக்குதல் ஆகும்.
- 2020-21 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் இதற்காக ரூ.9,994 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, மாநில அரசு இத்திட்டத்திற்க்காக 60:40 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கப்படுகிறது. வடக்கு மற்றும் இமாலய பகுதியில் மத்திய அரசு 90% நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### நாடு முழுவதும் 10,000 வேளாண் உற்பத்தி ஊக்குவிப்பு அமைப்புகள்

- எஃப்.பி.ஓ. என்ற வேளாண் உற்பத்தி அமைப்பிற்கு வேளாண் உற்பத்தி உருவாக்கம் மற்றும் ஊக்குவிப்பு அமைப்பு என்று பெயர் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்று நாடு முழுவதும் 10,000 அமைப்புகள் உருவாக்கப்படும்.
- விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக கடந்த 2019-20 நிதி நிலை அறிக்கையில் இந்த வேளாண் உற்பத்தி அமைப்பு குறித்து அறிவிக்கப்பட்டிருந்தது.
- சிறு விவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்பு, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், நபார்டு (தேசிய விவசாய ஊரக வளர்ச்சி வங்கி) மற்றும் மாநில அரசுகளும் இந்த அமைப்புகளின் உருவாக்கத்தில் பங்கு கொள்ளலாம்.

**ஊரக வேலைவாய்ப்புத் திட்ட அமலில் ஒடிஷாவின் தேசிய சாதனை**

- அரசு நிர்வாகத்தில் சமீப காலமாக சிறப்பாகச் செயல்படும் ஒடிஷா மாநிலம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட அமலிலும் சாதனை படைத்திருக்கிறது.
- பசுமை வேலிகள், ஊட்டச்சத்துக் காய்கறித் தோட்டம், அங்கன்வாடி மையத் தோட்டம், உராட்சி நூலகம், பன்மைப் பயன்பாட்டு ஏரிகள், ஊடுபயிர் சாகுபடி, கால்நடைத் தீவன வளர்ப்பு, கால்நடைக் கொட்டகைகள் அமைப்பு, நில மேம்பாடு ஆகிய பணிகளையும் இதில் சேர்த்து வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது

**பிரதமரின் கிசான் திட்டத்தின் கீழ் ரூ.51 ஆயிரம் கோடி பாட்டுவாடா**

- பிரதமரின் கிசான் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு இதுவரை ரூ.51 ஆயிரம் கோடி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- பிரதமரின் கிசான் சம்மான் நிதி திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு பிப்ரவரி 24-ம் தேதி அறிமுகம் செய்தார். இந்த திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்தத் தொகை 3 தவணைகளாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

**ஜியோ பார்ஷி திட்டம்**

- இத்திட்டம் பார்சி சமூகத்தின் மக்கள் தொகை அதிகரிக்கும் நோக்கத்துடன் சிறுபான்மை விவகார அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டது ஆகும்.
- இது இரண்டு பிரிவுகளை கொண்டது. ஒன்று மருத்துவ உதவி மற்றும் ஆலோசனை வசதிகளை கொண்டது.
- தேசிய சிறுபான்மை ஆணையம் சட்டம் 1992ன் படி, 2013 ஆண்டு வரை 233 பார்சி சமூகம் அதிகரித்து உள்ளதாக மத்திய சிறுபான்மை விவகார அமைச்சர் அபாஸ் நவி தெரிவித்து உள்ளார். பார்சி சமூகம் என்பது சௌராஷ்டிரியர் ஆவார்கள்.
- ஜியோ பார்சி திட்டத்தின் கீழ் மத்திய அரசு இச்சமூகத்தை மேம்படுத்த கடந்த 7 ஆண்டுகளில் 14 கோடி வழங்கியுள்ளது.

# 2.3 அரசியல் கட்சிகள் மற்றும் இந்திய அரசியல் அமைப்புகள்

**22வது சட்ட ஆணையம் உருவாக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- மூன்றாண்டு காலத்திற்கு செயல்படும் வகையில், 22-ஆவது சட்ட ஆணையத்தை உருவாக்க பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- சட்ட ஆணையத்தில் மத்திய அரசு முன்வைக்கும் விவகாரங்களைத் தவிர, சட்டம் குறித்த ஆய்வு மேற்கொள்ளும்.
- மேலும் பல்வேறு சீர்திருத்தங்களைப் பற்றிய யோசனைகளை அளிக்கவும் ஆணையம் கேட்டுக் கொள்ளப்படும்.
- புதிதாக நிறைவேற்றப்பட வேண்டிய சட்டங்கள் குறித்தும் இந்த ஆணையம்ஆய்வு செய்யும்.

**தொழில்நுட்பக் குழு:**

- மத்திய அரசிற்கான முதன்மை அறிவியல் ஆலோசகரை தலைவராகக் கொண்ட 12 உறுப்பினர்கள் கொண்ட 'தொழில்நுட்பக் குழு' ஒன்று உருவாக்கப்படும்.

**கிருஷ்ணகிரியில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்கப்படும்**

- கிருஷ்ணகிரியில் தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் கூறினார்.

# 3. புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### பருவநிலை மாறுபாட்டால் 2070-க்குள் மூன்றில் ஒரு பங்கு தாவர, விலங்கினம் அழிந்துவிடும்

- அமெரிக்காவின் நியூயார்க்கிலுள்ள தேசிய அறிவியல் அகாடமியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் பருவநிலை மாறுபாடு தொடர்பாக ஒரு ஆய்வை மேற்கொண்டனர்.
- பருவநிலை மாறுபாட்டால் 2070-ம் ஆண்டுக்குள் உலகில் உள்ள மூன்றில் ஒரு பங்கு தாவர, விலங்கினம் அழிவைச் சந்திக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.


### புதிய வகை கரப்பான் பூச்சி இனம் கண்டுபிடிப்பு

- இந்திய விலங்கியல் கணக்கெடுப்பு அமைப்பு மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் மேற்கு தொடர்ச்சி மலையில் புதிய வகை கரப்பான் பூச்சியை கண்டுபிடித்துள்ளனர். Allacta Kalakkadensis என்ற பெயர் கொண்ட புதிய இனத்தை கண்டுபிடித்து உள்ளனர். புதிய கரப்பான் பூச்சி இனம் களக்காடு-முண்டந்துறை பகுதியில் கண்டுபிடித்து உள்ளனர்.

### இயற்கையை பாதுகாப்பதில் மக்களின் பங்களிப்பு முக்கியம்

- குஜராத் மாநிலம் காந்திநகரில், இடம்பெயரும் வன உயிரினங்கள் பாதுகாப்பு மாநாட்டின் 13-ஆவது கருத்தரங்கு தொடங்கியது.

### இந்தியாவின் பல்லுயிர்தன்மை:




- உலகளவில் இந்தியா 2.5 சதவீத நிலப்பரப்பு, 17 சதவீத மக்கள்தொகை, 18 சதவீத கால்நடைகள், 8 சதவீத பாலூட்டிகள், 12 சதவீத பறவைகள், 6 சதவீத ஊர்வனங்கள், 4 சதவீத நிலம் மற்றும் நீரில் வாழும் உயிரினங்களை கொண்டுள்ளது. இதுவே இந்தியாவின் பல்லுயிர்தன்மை.
- இடம்பெயரும் வன உயிரினங்கள் பாதுகாப்பு மாநாட்டின் 13-ஆவது கருத்தரங்கு வருகிற 22-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.
- இதில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர் என 130 நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

### சுந்தரவனப் பகுதியில் நீண்டகால பருவமழை

- சுந்தரவனப் பகுதியில் பருவமழை நீண்டகாலம் நீடிக்கும் என்றும் வானியல் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர். தி சுந்தர்பன்ஸ் மற்றும் காலநிலை மாற்றம் என்ற தலைப்பிலான இதழில் வெளியிடப்பட்டது.
- காட்டு விலங்குகளின் புலம்பெயர்ந்த உயிரினங்களின் பாதுகாப்பு தொடர்பான மாநாட்டின் போது இத்தகவல் பகிரப்பட்டது.

- காலநிலை மாற்றத்தினால் சுந்தரவனப் பகுதியில் பருவமழை தீவிரமாக்க மாறும் என்று வானிலை நிபுணர்கள் கணித்துள்ளனர்.

### தோட்டக்கலை பயிர்களின் பரவும் அமெரிக்க பூச்சிகள்



- தமிழகத்தில் தோட்டக்கலைப் பயிர்களில் அமெரிக்காவின் 'ரூகோஸ் ஸ்பைரலிங்' என்ற வெள்ளை ஈ தாக்குதல் அதிகரித்துள்ளது.
- வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்கள் மூலம் அந்நாட்டு வைரஸ் பூச்சிகள் ஊடுருவுகின்றன. அந்த வகையில் அமெரிக்காவின் 'ரூகோஸ் ஸ்பைரலிங்' என்கிற வெள்ளை ஈ வைரஸ் பூச்சிகள் தற்போது தமிழகத்தில் தென்னை, பாக்கு, கொய்யா, வாழை, பப்பாளி, பலா, அருநெல்லி, மாதுளை போன்ற பயிர்களை அதிகம் தாக்குகின்றன.
- இதனால் உலக அளவில் ஆண்டுதோறும் 100 பில்லியன் டாலர் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது.

### இந்தியாவில் இரட்டிப்பாகிறது ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கை

- உலகிலேயே ஆசிய சிங்கங்களுக்கான ஒரே வாழ்விடமாக இருக்கும் குஜராத் மாநிலத்தின் கிர் தேசிய பூங்காவில் அத்தகைய சிங்கங்களின் எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகளில் 100 சதவீதம் அளவுக்கு அதிகரித்துள்ளது.
- சிங்கங்கள் கணக்கெடுப்பு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுகிறது.

**கிர் காடுகளில் சிங்கத்தின் எண்ணிக்கை**

- ***1985 - 239***
- ***2015 - 523***

- ஆசிய சிங்கங்கள் ஆபத்தில் இருக்கும் உயிரினமாக கடந்த 2000-ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. பின்னர், சிங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து, 2005-இல் அந்த அறிவிப்பு திரும்பப் பெறப்பட்டது.

### பியாஜியோ அபே நிறுவனத்தின் பேட்டரி ஆட்டோ

- ஆந்திர பிரதேச மாநிலம் விஜயவாடாவில் "பியாஜியோ அபே" நிறுவனத்தின் பேட்டரியில் ஓடும் ஆட்டோ அறிமுகப்படுத்தப்பட்டது.


### எம்.எம் சரணாலயம் புலி காப்பகமாக மாற்ற முடிவு

- கர்நாடக மாநிலத்தின் சம்மராஜ்நகர் மாவட்டத்தில் உள்ள மலாய் மஹாதேஷ்வரா வனவிலங்கு சரணாலயம் புலிகள் காப்பகமாக மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் இதற்கான முடிவுகளை மேற்கொண்டுள்ளது.

### பக்கே புலிகள் காப்பகம்: Pakke Tiger Reserve

- 2013ஆம் ஆண்டில் அருணாச்சல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சாலைப் பணிகளில் இந்தியாவின் கிழக்கில் அமைந்துள்ள தேசிய பூங்காவான நம்தபா தேசிய பூங்கா பாதிப்பிற்கு உள்ளானது. அதைப்போல அருணாச்சல பிரதேசத்தின் மற்றொரு புலிகள் காப்பகமான பக்கே புலிகள் காப்பகம் அருணாச்சல பிரதேசத்தின் கிழக்கு-மேற்கு தொழிற்சாலை முனைய சாலை அமைக்கும் திட்டத்தில் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.
- தற்போது 862 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பக்கே புலிகள் காப்பகத்தின் வழியே 692 கிலோ மீட்டர் நீள சாலை அமைக்கப்பட உள்ளது.

### கிழக்கு தொடர்ச்சி மலையை யுனெஸ்கோ பாரம்ரிய தளமாக அறிவிக்க வலியுறுத்தல்




- கிழக்கு தொடர்ச்சி மலையை யுனெஸ்கோ பாரம்பரிய தளமாக அறிவிக்க வேண்டும் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வலியுறுத்தி உள்ளனர்.
- மேலும் கிழக்கு தொடர்ச்சி மலை அமைந்து ஐந்து மாநிலங்களான ஒடிசா, தெலங்கானா, ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா இணைந்து மலையின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மேம்படுத்த முயற்சிகள் எடுக்க வேண்டும் என இந்த சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குழு வலியுறுத்தி உள்ளது.
- கிழக்கு தொடர்ச்சி மலை மொத்தம் 75000 சதுர கி.மீ வரை பரவியுள்ளது. மகதாயி, காவிரி, கிருஷ்ணா, பன்னா, காவிரி ஆகிய நதிகளால் கிழக்கு தொடர்ச்சி மலை பிரிந்துள்ளது.
-

### மாசடைந்த 30 நகரங்கள் பட்டியலில் காஜியாபாத் உட்பட 21 இந்திய நகரங்கள்

- உலக காற்று தர ஆய்வறிக்கை-2019-ஐ ஐகியூஏர் ஏர் விஷுவல் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இதில் உலகின் மிகவும் மாசடைந்த நகரங்கள் பட்டியலில் உத்தரபிரதேசத்திலுள்ள காஜியாபாத் முதல் இடத்தை பிடித்துள்ளது.
- 2-வது இடத்தை சீனாவிலுள்ள ஹோடன் நகரமும், பாகிஸ்தானின் குஜ்ரன்வாலா 3-வது இடத்தையும், பைசலாபாத் 4-வது இடத்தையும் பெற்றுள்ளன. இந்தியாவின் தலைநகரமான டெல்லி இந்தப் பட்டியலில் 5-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- "2018-ஐ காட்டிலும், 2019-ம் ஆண்டில் இந்திய நகரங்களில் மாசு குறைந்துள்ளது. சல்பேட், நைட்ரேட், கருப்பு, கார்பன் உள்ளிட்ட மாசுப் பொருட்களின் அளவு காற்றில் குறைந்துள்ளது.

### உல்சூர் ஏரியின் மாசு குறித்து ஆராய குழு

- தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தெற்கு அமர்வு பெங்களூரு நகரத்திற்கு அருகில் உள்ள உல்சூர் ஏரியின் அதிகபட்ச மாசு குறித்த பிரச்சனையில் தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்து, விசாரித்து அந்த ஏரியின் நீர் மாதிரிகளை சேகரித்து சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகளால் நீர் பாதிக்கப்பட்டுள்ளதாக என ஆராய குழுவை அமைக்க உத்தரவிட்டுள்ளது.
- உயரியியல் ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் உல்சூர் ஏரியின் நீரின் நிறம் மாற்றத்தின் காரணமாக தேசிய பசுமை தீர்ப்பாயம் இந்த உத்தரவுகளை பிறப்பித்துள்ளது.



# 4. பொருளாதாரம்

## 4.1 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

### இந்திய அரசின் நிதியாண்டுடன் ரிசர்வ் வங்கியின் நிதியாண்டு மாற்றப்பட்டுள்ளது

- ரிசர்வ் வங்கியின் நிதியாண்டை தற்போதுள்ள ஜூலை-ஜூன் என்பதிலிருந்து மாற்றம் செய்து அரசு கடைபிடித்து வரும் (ஏப்ரல்-மார்ச்) நிதியாண்டுடன் இணைக்க பீமல் ஜலான் தலைமையிலான இயக்குநர் குழு பரிந்துரை செய்துள்ளது. இந்த திட்டத்தை அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கவும் அந்த குழு ஒப்புதல் தெரிவித்துள்ளது.
- ரிசர்வ வங்கியின் மத்திய இயக்குநரகத்தின் 582வது கூட்டத்தில் நிதி ஆண்டுகளை சீரமைக்க பரிந்துரைகளை முன்மொழியப்பட்டது.

### இந்திய சர்வதேச பின்னலாடை கண்காட்சி தொடக்கம்




- புதிய ஜவுளிக் கொள்கை மூலமாக எதிர்காலத்தில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பெறும் என திருப்பூரில் 47-வது இந்திய சர்வதேச பின்னலாடை கண்காட்சியை தொடங்கி வைத்து மாநில கைத்தறிகள் மற்றும் ஜவுளித் துறை இயக்குநர் எம்.கருணாகரன்.
- நாட்டில் ஜவுளித் துறையை பொறுத்தவரை தமிழகம் முக்கிய பங்காற்றி வருகிறது.

### உலகளவில் பொருளாதாரத்தில் இந்தியா ஐந்தாவது இடம்

- வாங்கும் திறன் அடிப்படையில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி $10.51 டிரில்லியன் உள்ளது.
- இது ஜப்பான் மற்றும் ஜெர்மன் நாடுகளைவிட அதிகம்.
- இதன் மூலம் உலகளவில் பொருளாதாரத்தில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- அதிக மக்கள்தொகை கொண்ட இந்தியாவில் தனிநபர் வருமானம் $2,170 ஆகும்.

| தர வரிசை | நாடு | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
|---|---|---|
| 1 | அமெரிக்கா | $21.44 டிரில்லியன் |
| 2 | சீனா | $14.14 டிரில்லியன் |
| 3 | ஜப்பான் | $5.15 டிரில்லியன் |
| 4 | ஜெர்மன் | $4 டிரில்லியன் |
| 5 | இந்தியா | $2.94 டிரில்லியன் |

### ஏப்ரல் 1 முதல் பிஎஸ்-6 வகை பெட்ரோல், டீசல் விநியோகம்

- சுற்றுச்சூழல் மாசை கட்டுப்படுத்தும் வகையில், ஏப்ரல் 1 முதல் விநியோகமாகும் பெட்ரோல், டீசலும் பிஎஸ் 6 வகையிலானதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

- எரிபொருளில் உள்ள கந்தக (சல்ஃபர்) சேர்மத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டே அதன் தரம் வரையறுக்கப்படுகிறது.
- அந்தவகையில் தற்போது இந்தியா பிஎஸ் 4 முறையிலான எரிபொருளைப் பயன்படுத்தி வருகிறது.
- அதில் 50 பிபிஎம் அளவில் சல்ஃபர் சேர்மம் உள்ளது. ஆனால் நடைமுறைக்கு வரவுள்ள பிஎஸ் 6 எரிபொருளில் சல்ஃபரின் அளவு 10 பிபிஎம் மட்டுமே. இந்நிலையில் சுற்றுச்சூழல் மாசு பெருமளவில் கட்டுப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உலகின் முதல் டிஜிட்டல் கரன்சி: e-Krona**




- ஸ்விடனின் மத்திய வங்கியான ஸ்வெரிஜன் ரிக்ஸ் பேங்க், அதன் டிஜிட்டல் நாணயமான இ-க்ரோனாவை சோதனைக்கு உட்படுத்தி உள்ளது. இது உலகின் மத்திய வங்கியால் உருவாக்கப்பட்ட டிஜிட்டல் நாணயம் ஆகும். இந்த நாணய சோதனை வரும் 2021ஆம் ஆண்டு வரை நடைபெற உள்ளது. இந்த இ-க்ரோனாவை அன்றாட வங்கி சேவை மற்றும் மொபைல் பயன்பாடுகளில் பயன்படுத்தப்பட உள்ளது. இச்சோதனை மூலம் டிஜிட்டல் நாணயம் உருவாக்கம் வெற்றி அடைந்தால் முழு பயன்பாட்டிற்கு வெளியிடப்பட உள்ளது.

**திட்டமிட்டப்படி வங்கிகள் இணைப்பு**

- மத்திய அரசு திட்டமிட்டபடி வங்கிகள் இணைப்பு நடவடிக்கை நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.
- நாட்டிலுள்ள 10 பொதுத் துறை வங்கிகளை 4 வங்கிகளாக இணைப்பதற்கான அறிவிப்பை மத்திய அரசு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியிட்டது. அதன்படி, யுனைடெட் பேங்க் ஆஃப் இந்தியா, ஒரியண்டல் பேங்க் ஆஃப் காமர்ஸ் ஆகியவை பஞ்சாப் நேஷனல் வங்கியுடன் இணைக்கப்படவுள்ளன. அந்த நடவடிக்கையின் மூலம் பஞ்சாப் நேஷனல் வங்கியை, நாட்டின் 2-ஆவது மிகப்பெரிய வங்கியாக ஏப்ரல் 1 முதல் அறிவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- அதேபோல், சிண்டிகேட் வங்கியை கனரா வங்கியுடனும், அலாகாபாத் வங்கியை இந்தியன் வங்கியுடனும் இணைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆந்திரா வங்கி மற்றும் கார்ப்பரேஷன் வங்கி ஆகியவை யூனியன் பேங்க் ஆஃப் இந்தியாவுடன் இணைக்கப்படவுள்ளன.
- **இந்தியாவின் வளர்ச்சியைக் கணக்கிடுவதற்கு ரிசர்வ் வங்கி புதிய முறை அறிமுகப்படுத்தியது**

### இந்தியாவின் வளர்ச்சியைக் கணக்கிடுவதற்கு ரிசர்வ் வங்கி புதிய முறையை அறிமுகப்படுத்தியது

- *இந்தியாவின் வளர்ச்சியைக் கணக்கிடுவதற்கு ரிசர்வ் வங்கி புதிய முறையை "Nowcasting Indian GDP growth using a Dynamic Factor Model" அறிமுகப்படுத்தி உள்ளது. கணக்கீடு செய்ய 12 புதிய குறியீடுகளை அறிமுகம் செய்துள்ளது.*

**துறைகள்**

- தொழில் துறை உற்பத்தி குறியீடு – நுகர்வோர் பொருட்கள்
- தொழில்துறை உற்பத்தி குறியீடு – முக்கிய துறைகள்
- தானியங்கி மோட்டார் வாகன விற்பனை
- எண்ணெய் அல்லாத தங்கம் அல்லாத இறக்குமதி
- ஏற்றுமதி
- ரயில் சரக்கு
- விமான சரக்கு
- வெளிநாட்டு சுற்றுலா வருகை
- அரசாங்க வரி ரசீதுகள்
- பெயரளவு பயனுள்ள பரிமாற்ற வீதம்
- சென்செக்ஸ்
- வங்கி கடன்

# 4.2 தற்போதைய சமூக பொருளாதார சிக்கல்

### வேளாண்மை ஏற்றுமதியை ஊக்குவிக்க குழு




- *15வது நிதி குழு, ஐடிசி நிறுவனத்தின் தலைவரான சஞ்சீவ் பூரி (Sanjiv Puri) தலைமையில் வேளாண் பொருட்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்க எட்டு பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளது. இக்குழு மாநிலங்களுக்கு இடையே செயல்திறனை ஊக்குவித்தல் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் போன்றவை பற்றிய பரிந்துரைகள் வழங்க அமைக்கப்பட்டுள்ளது.*

# 5. அறிவியல்




## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள்

### 10 புவி கண்காணிப்பு செயற்கை கோள்: இஸ்ரோ



- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் வரும் 2020-21 ஆண்டில் 10 புவி கண்காணிப்பு செயற்கைகோளை செலுத்த உள்ளதாக தனது வருடாந்திர அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதில் முதல் Geo Imaging Satellite செலுத்த உள்ளதாக தெரிவித்துள்ளது. மூன்று தகவல்தொடர்பு செயற்கைகோள் மற்றும் இரண்டு வழிகாட்டி செயற்கைகோள் வரும் நிதி ஆண்டில் செலுத்த உள்ளதாகவும் 36 புதிய திட்டங்கள் உருவாக்கி உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.
- RISAT-2BR2, RISAT-1A மற்றும் 2A, Oceansat-3 மற்றும் Resourcesat-3/3S ஆகிய புவி கண்காணிப்பு செயற்கை கோளை செலுத்த உள்ளது.

### யோதவ் செயலி தொடக்கம்(Yodhavu Mobile App)

- கேரள மாநில முதலமைச்சர் பிரனாயி விஜயன் அவர்கள் யோதவ் என்ற மொபைல் செயலியை அறிமுகம் செய்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் போதை பொருள் மற்றும் விநியோகம் பற்றி அரசுக்கு இச்செயலி மூலம் தெரிவிக்கலாம்.
- இந்த செயலி கொச்சின் நகரகாவல்துறையினர் அறிமுகம் செய்துள்ளனர். மேலும் புகார்களை தெரிவிப்பவர்களின் அடையாளங்களை ரகசியமாக பாதுகாத்து கொள்ள முடியும்.


### மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளை செயலி மூலம் காண்காணிக்க திட்டம்

- தமிழகம் முழுவதும் உள்ள நடுநிலைப் அரசுப் பள்ளிகளில் கற்றல் செயல்பாடுகளை கண்காணிக்க புதிய செல்லிடப்பேசி செயலியை அறிமுகப்படுத்த தமிழக கல்வித் துறை திட்டமிட்டுள்ளது.
- ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பாடங்கள் கற்பிக்கும் முறை மற்றும் மாணவர்கள் எவ்வாறு கவனம் செலுத்துகிறார்கள்என்பதைச்சோதிப்பதற்காக இந்த செயலி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
- கடந்த அக்டோபர் மாதம் முதல்கட்டமாக சென்னை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களைச் சேர்ந்த அரசு மற்றும் அரசு உதவி பள்ளிகளில் 'அப்சர்வேஷன் மொபைல் ஆப்' (observation mobile App) அறிமுகப்படுத்தபடும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்து.

### வியாழனில் அதிக நீர் உள்ளது


- *வியாழன் கோளின் வளிமண்டலத்தில் உள்ள மூலக்கூறுகளில் 0.25 சதவீதம் நீர் இருப்பதாக 2011-ல் நாசா அனுப்பிய ஜுனோ (Juno) திட்டத்தின் தரவுகளின் அடிப்படையில் ஆய்வு முடிவுகள் வெளியாகியுள்ளன.*
- *“நேச்சர் அஸ்ட்ரானமி“ இதழில் வெளியாகியிருக்கும் இந்த ஆய்வு முடிவுகளால்ஃ முன்னர் நினைத்ததைவிட வியாழனில் அதிக நீர் இருப்பது தெரியவந்துள்ளது.*

### GISAT-1 மார்ச் 5ல் இஸ்ரோ செலுத்த உள்ளது




- *நாட்டின் முதல் புவி புகைப்பட செயற்கைகோளை (Earth Imaging Satedllite) வரும் மார்ச் 5 அன்று சதீஸ்தவான் விண்வெளி மையத்தில் இருந்து செலுத்தப்பட உள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்துள்ளது.*
- *நடுத்தர எடை கொண்ட ஜி.எஸ்.எல்.வி. செயற்கைக்கோளில் இருந்து ஜீசாட்-1 செயற்கைகோளின் எடை 2275 கி.கி. ஆகும்.*
- *ஜிசாட்-1 இந்தியத் துணை கண்டத்தின் நிகழ்நேர கண்காணிப்பு செயற்கைகோளாக செயல்பட உள்ளது.*

### ஆக்ஸிஜன் இல்லமால் இயங்கும் ஒட்டுண்ணி



- *இயங்குவதற்கும், உயிர் வாழ்வதற்கும் ஆக்ஸிஜன் வாயு தேவைப்படாத ஒட்டுண்ணி இனத்தை இஸ்ரேலிய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.*
- *‘ஹென்னிகுயா சால்மினிகோலா’ என்ற ஒட்டுண்ணியை டெல் அவிவ் நகர விஞ்ஞானிகள் அண்மையில் ஆய்வுக்கு உள்படுத்தினர்.*
- *வெறும் 10 செல்களால் மட்டுமே ஆன அந்த ஒட்டுண்ணி, பெரும்பாலும் கிழங்கான் வகை மீன்களின் உடலில் காணப்படுகின்றன.*
- *அந்த ஒட்டுண்ணியை ஆய்வு செய்தபோது, அதனிடம் ‘மிடோகாண்ட்ரியா’ என்ற அமைப்பு இல்லாததைக் விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.*

### சந்தை நுண்ணறிவு மற்றும் எச்சரிக்கை அமைப்பு

- *மத்திய உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சர் ஹர்மித் கவுர் படில் சந்தை நுண்ணறிவு மற்றும் எச்சரிக்கை அமைப்பை டெல்லியில் தொடங்கி வைத்தார்.*
- *டாப்கார்ப்ஸ்(TopCrops) என்றுஅழைக்கப்படும் தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலைவாசியை MIEWS இணையதளம் கண்காணிக்கும்.*
- *இதை ஆபரேஷன் பசுமை கீழ் தொடங்கப்பட்டு உள்ளது. விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த, சரியான சந்தை விலைகள் “Operation Green” அமைப்பின் கீழ் கண்காணிக்கப்படுகிறது.*

### ஜி.எஸ்.எல்.வி - எப் 10 ராக்கெட்

- புவி கண்காணிப்புக்கு உதவும் முதல் ஜிஐசாட்-செயற்கைக்கோளை, இந்தியாவின் அதிக திறன் கொண்ட ஜி.எஸ்.எல்.வி.-எப்10 ராக்கெட் மூலம் மார்ச் 5-ஆம் தேதி இஸ்ரோ விண்ணில் செலுத்தவுள்ளது.
- இதன் எடை 2268 கி.கி கொண்டது. இந்த ஜி.எஸ்.எல்.வி விமானத்தில் 4 மீட்டர் விட்டம் கொண்ட ஓகிவ் வடிவ பேலோட் ஃபேரிங் முதல் முறையாக பறக்கவிடப்படுகிறது.

### பூமியைச் சுற்றும் புதிய “நிலவு”

- நிலவைப் போலவே பூமியை சுற்றி வரும் இன்னொரு இயற்கைப் பொருளை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். ஒரு கார் அளவே கொண்ட அந்த குறுங்கோளை அமெரிக்காவின் நாசா உதவியுடன் செயல்படும் அந்த நாட்டு காடலினா ஸ்கை சர்வே அமைப்பின் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.
- ‘2020 சிடி3’ எனப் பெயரிடப்பட்டுள்ள அந்த குறுங்கோள், 3 ஆண்டுகளுக்கு முன்னர் புவி வட்டப் பாதையை அடைந்திருக்கலாம் எனவும், அது பூமியை தற்காலிமாகவே சுற்றி வருவதாகவும் அந்த விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.
- ஏற்கெனவே, ‘2006 ஆர்ஹெச்120’ என்ற குறுங்கோள் பூமியைச் சுற்றி வரும் நிலையில், தற்போது அதே போன்ற 2-ஆவது குறுங்கோள் கண்டறியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### பூமியைப் போன்று இன்னொரு கிரகம்

- அண்டவெளியில் பூமியின் தன்மைகளை ஒத்த இன்னொரு கிரகத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.
- சூரியனைப் போலவே பால்வெளி மண்டலத்திலுள்ள பிற நட்சத்திரங்களைச் சுற்றி வரும் கோள்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு நிறுவனம் ”கெப்ளர்“ விண்கல நுண்ணோக்கியை கடந்த 2009-ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தியது.
- சூரியனைச் சுற்றி வரும் கோள்களில் உயிர்கள் வாழத் தகுதியாக உள்ள பூமியைப் போல, பிற நட்சத்திரங்களையும் உயிர்கள் வாழ்வதற்கேற்ற கிரகங்கள் சுற்றி வருகின்றனவா என்பதைக் கண்டறிவதற்காக அந்த விண்கல நுண்ணோக்கி அனுப்பபட்டது.
- 9 ஆண்டுகளாக பல்வேறு விவரங்களை சேகரித்து பூமிக்கு அனுப்பிய கெப்ளர் விண்கலம், கடந்த 2018-ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றது.
- இந்த நிலையில், கெப்ளர் பதிவு செய்திருந்த தகவல்களை ஆய்வு செய்த விஞ்ஞானிகள், அவற்றைப் பயன்படுத்தி இதுவரை அறியப்படாத 17 புதிய கோள்கள் பால்வெளி மண்டல நட்சத்திரங்ளை சுற்றி வருவதைக் கண்டறிந்துள்ளனர்.
- அவற்றில் ஒரு கிரகம், பூமியின் தன்மைகளை ஒத்துள்ளதாகவும், அதன் காரணமாக அந்த கிரகத்தில் உயிர்கள் வாழ்வதற்குரிய சூழல் நிலவலாம் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.
- அந்த கிரகத்துக்கு கேஐசி-7340288 என அவர்கள் பெயரிட்டுள்ளனர்.
- புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள கேஐசி-7340288 கோள், பூமியிலிருந்து சுமார் 20 ஒளியாண்டு தூரத்தில் உள்ளது.

# 5.2 சுகாதார அறிவியல் பற்றிய சமீபத்திய கண்டுபிடிப்புகள்

### சூரிய சக்தியில் இயங்கும் ஆளில்லா விமானம் PHASA-35

- சூரிய சக்தியில் இயங்கும் ஆளில்லா விமானம் *PHASA-35 - Persistent High Altitude Solar Aircraft* அதன் முதல் சோதனை வெற்றி அடைந்துள்ளது. இந்த ஆளில்லா விமானம் நீண்ட நேரம் சூரிய ஒளி மூலம் இயங்கும் சோதனை தற்போது வெற்றி அடைந்து உள்ளது. இந்த விமானம் பி.ஏ.இ அமைப்பு நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்டது.

# 5.3 ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு

### கூகுள் ஜம்மு-காஷ்மீர் வரைபடம் வெளியீடு

- புகழ்பெற்ற தேடுபொறி நிறுவனமான கூகுள், ”சர்ச்சைக்குரிய“ ஜம்மு-காஷ்மீரின் எல்லை பகுதிகள் அடங்கிய வரைப்படத்தை வெளியிட்டுள்ளது. ஜம்மு-காஷ்மீர் எல்லையை சிவப்பு நிறத்தில் குறித்து கூகுள் வரைப்படம் *(Google Map)* வெளியிட்டுள்ளது.

### Himmat Plus செயலி

- டெல்லி காவல்துறை, தனியார் வாகன ஓட்டும் நிறுவனமான உபர் உடன் இணைந்து இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் *Himmat Plus* செயலியை அறிமுகம் செய்துள்ளது. உபர் வாகனத்தில் பயணிக்கும் பயணாளர்கள் பாதுகாப்பு வழங்குவதற்காக இந்த செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### HRMS செயலி



- ரயில்வே வாரியத்தின் தலைவர் ஸ்ரீவினோத் குமார் யாதவ் *HRMS – Human Resource Management system* என்ற செயலியை அறிமுகம் செய்து வைத்தார். இச்செயலி மூலம் இந்திய ரயில்வே வாரியத்தில் உள்ள வேலைவாய்ப்புகள் பற்றி அறிந்துகொள்ள முடியும். இந்த செயலியை மத்திய ரயில்வே தகவல் அமைப்பு *(Centre for Railway Information System)* உருவாக்கி உள்ளது.

### “திருமதி கார்ட்” என்ற செயலி

- திருச்சியை சேர்ந்த தேசிய தொழில்நுட்பக் கழகமானது, சுய உதவிக்குழுக்களின் தயாரிப்புகளின் விற்பனையை ஊக்குவிப்பதற்காக “திருமதி கார்ட்“ எனும் இணைய வழி வணிகத்திற்காக கைப்பேசி செயலியை அறிமுகப்படுத்தி உள்ளது.

### “சந்துஷ்த் மொபைல் செயலி”

- மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஸ்ரீ சந்தோஷ் குமார் கங்வார் அவர்கள் மாநில தொழிலாளர்காப்பீட்டு நிறுவன பயனாளர்கள் எளிதில் பயன்பெறும் வகையில் ”சந்துஷ்த்” என்ற செயலியை அறிமுகம் செய்ய உள்ளதாக தெரிவித்தார்.
- தொழிலாளர்கள் தங்கள் காப்பீட்டு தொகையை பெறுவதில் உள்ள தடைகளை நீக்கவும் *ESIC* மருத்துவமனை சேவைகளை பெறுவதையும் எளிமையாக்குகிறது.

# 6 தினசரி தேசிய நிகழ்வு



### இந்தியாவின் முதல் ஆற்றல் நடுநிலைத்தன்னை ரயில் நிலையம்

- இந்தியாவில் முதல் முதலாக தென் மத்திய ரயில்வே மண்டலம் 13 ஆற்றல் நடுநிலைத்தன்மை ரயில் நிலையங்களை கொண்டுள்ளது. நாட்டில் அனைத்து ரயில் நிலையங்களில் உள்ள ஆற்றல் நிலையங்களின் எண்ணிக்கையைவிட இங்கு அதிகமாக உள்ளது.
- இந்த நிலையங்களில் 100% சூரிய ஒளி மின்தகடுகள் மூலமாக ஆற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது. தென் மத்திய ரயில்வே மண்டலங்களில் உள்ள இந்த 13 நிலையங்கள் அனைத்திலும் 99 கிலோ வாட் ஆற்றல் உற்பத்தி செய்யும் ஆலை நிறுவப்பட்டுள்ளது.

### நகரங்களுக்கு இடையோன முதல் மின்சார பேருந்து சேவை

- போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி மகாராஷ்டிரா மாநிலத்தில் நகரங்களுக்கு இடையேயான முதல் மின்சார பேருந்து சேவையை தொடங்கி வைத்தார். இந்த மின்சார சேவை மும்பை முதல் புனே வரை இயக்கப்பட உள்ளது.

### `Pyaar ka Paudha` மரங்கள் வளர்க்கும் திட்டம்

- பீகார் மாநில சுற்றுச்சூழல் மற்றும் காடுகள் துறை அமைச்சகம் `Pyaar ka Paudha`(a plant of love) என்ற திட்டத்தை தொடங்கி உள்ளது.
- இதன் மூலம் மாநிலத்தில் மரங்கள் நடுவதை ஊக்குவித்தல் ஆகும். இது ஜல் ஜீவன் ஹரியாலி (Jal Jeevan Hariyali) தொடங்கப்பட்டது.

### பழங்குடியின மொழிகள் மொபைல் வானொலி

- அசுர் பழங்குடியினர் புதிய செயலியில் வானொலியில் (Mobile Radio) நிகழ்ச்சிகளை தொடங்கி உள்ளது. அசுர் (Asur) மொழி யுனெஸ்கோ பட்டியலில் அழிந்து வரும் மொழிகள் பிரிவில் இடம்பெற்றுள்ளது.
- முதல் நிகழ்ச்சி கடந்த ஜனவரி 19 அன்று நேத்தர்ஹட் (Netarhat) என்ற இடத்தில் நடைபெற்றது. கடந்த 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி லதேகர் மற்றும் குல்மா மாவட்டத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

### ஐந்து வயதுக்குட்பட்ட 8 இலட்ச குழந்தைகள் இறப்பு: யுனிசெஃப்

- ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் 2019ஆம் ஆண்டின் உலக குழந்தை அறிக்கையை வெளியிட்டுள்ளது. இதில் இந்தியாவில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள், இறப்பு விகிதம் 1000க்கு 37 என்று உள்ளதாக தெரிவித்துள்ளது.
- கடந்த 2019ஆம் ஆண்டில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 8 லட்சம் குழந்தைகள் இறந்துள்ளதாக உலக குழந்தைகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உலகளவிய முதலீட்டாளர்கள் மாநாடு

- *உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாடு ஜம்மு-காஷ்மீரில் (ஏப்ரல் 2020) முதல்முறையாக நடைபெற உள்ளது. முதலீட்டாளர்களை அதிகரிப்பதற்காக பிப்ரவரி 17 முதல் சாலை காட்சிகள் நடைபெற உள்ளது.*
- *இந்த சாலை காட்சிகள் கொல்கத்தா, மும்பை, பெங்களூரு, சென்னை, அகமதாபாத் மற்றும் ஹைதராபாத்தில் நடைபெற உள்ளது.*
- *ஜம்மு-காஷ்மீர் அரசால் மாநிலத்திற்கான முதலீடுகளை ஈர்ப்பதற்காக இந்த சர்வதேச சாலை காட்சிகள் நடத்ததப்படுகிறது.*

### புதிதாக பிறந்த குழந்தைகள் இறந்தவர்களின் எண்ணிக்கை மத்தியபிரதேசத்தில் அதிகம்

- *கடந்த மூன்று ஆண்டுகளில் புதியதாக பிறந்த குழந்தைகள் இறந்தவர்களின் எண்ணிக்கையில் மத்திய பிரதேச மாநில அரசு முதல் இடத்தில் உள்ளது.*
- *இறப்பு விகிதம் 11.5% உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் தேசிய சுகாதார திட்டத்தின் படி நாட்டின் இறப்பு விகிதம் சராசரி 7% ஆக உள்ளது.*

### நாடு-நேடு திட்டம் (Nadu-Nedu)

- *ஆந்திரபிரதேச மாநில முதலமைச்சர் Y.S.ஜெகன்மோகன் ரெட்டி சுகாதார திட்டமான நாடு-நேடு திட்டத்தின் முதல் கட்ட பணிகளை குர்னுஸர் என்ற இடத்தில் தொடங்கி வைத்தார்.*
- *இந்த திட்டத்திற்கான மருத்துவமனை மேம்பாட்டு பணிகளுக்காக அடுத்து மூன்று ஆண்டுகளுக்கு ரூ.11,737 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதல் கட்ட பணிக்காக ரூ.1129 கோடியை அம்மாநில அரசு ஒதுக்கி உள்ளது.*

### ராமாயாண யாத்திரை மார்ச் 5 தொடக்கம்

- *இந்திய ரயில்வே கேட்டரிங் மற்றும் சுற்றுலாத் துறை கழகம் பாரத் தர்ஷனின் ஒரு பகுதியாக "ராமாயணா யாத்திரை" என்ற பெயரில் ஒரு சிறப்பு ரயிலை அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் நாட்டில் உள்ள முக்கிய கோவில்களுக்கு யாத்திரை மேற்கொள்ளலாம் என்று இந்திய ரயில்வேத்துறை தெரிவித்துள்ளது.*
- *இந்த யாத்திரை மார்ச் 5 தொடங்கி மார்ச் 18 வரை 14 நாட்கள் நடைபெற உள்ளதாக ரயில்வேத்துறை தெரிவித்துள்ளது.*

### காசி-மகாகால் எக்ஸ்பிரஸ்

- *வாராணசி, மத்தியப் பிரதேச மாநிலம் உஜ்ஜைனி, ஓம்காரேஸ்வர் ஆகிய மூன்று ஜோதிர்லிங்க தலங்களையும் தரிசனம் செய்யும் வகையில் இந்த புனிதத்தலங்களுக்கு சென்று வருவதற்காக காசி- மகாக்கால் எக்ஸ்பிரஸ் ரயில் பிரதமர் மோடியால் காணொலி காட்சி மூலம் தொடக்கி வைக்கப்பட்டது.*
- *பிப்ரவரி 20-ஆம் தேதியில் இருந்து இந்த இரவு நேர ரயில் வணிகரீதியாக இயக்கப்படும்.*

### Bio Asia மாநாடு 2020




- *தெலங்கானா மாநில அரசு Bio-Asia மாநாடு 2020ஐ ஹைதராபாத்தில் தொடங்கியது.*
- *இம்மாநாட்டில் திறமைகளையும் அவற்றின் முதலீடுகளையும் ஆராய்வது முக்கிய நோக்கமாகும்.*
- *இம்மாநாட்டின் மையக்கருத்து: Today for Tomorrow.*

### நெகிழி பயன்பாடு இல்லாத விமான நிலையம்

- இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையம் இந்தியாவின் முதல் நெகிழி பயன்பாடு *(single-use plastic usage)* இல்லாத விமான நிலையம் ஆகும்.

### உலகளாவில் மூன்றாவது அதிகமாக பேசப்படும் மொழி: ஹிந்தி

- உலகளாவில் மூன்றாவது அதிகமாக பேசப்படும் மொழியாக ஹிந்தி உள்ளது. மொத்தம் 615 மில்லியன் மக்கள் ஹிந்தி மொழி பேசுகின்றனர். ஆங்கிலம் 1132 மில்லியன் மக்களால் பேசப்படுகிறது.

### "உள்நாட்டு பசுக்கள்" குறித்தஆராய்ச்சிக்கான திட்டம் மத்திய அரசு வெளியீடு

- உள்நாட்டு பசுக்கள் *(Indigenous Cows)* குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ள மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை SUTRA Pic என்ற முயற்சியை அறிமுகம் செய்துள்ளது.
- இத்திட்டத்திற்காக பயோ டெக்னாலஜி துறை, அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில், ஆயுஷ் அமைச்சகம், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் பங்குதாரராக உள்ளனர்.
- *SUTRA PIC - Scientific Utilisation Through Research Augmentation-Prime Products from Indigenous Cows.*

### ஐந்து முக்கிய மையக்கருத்து

- உள்நாட்டு மாடுகளின் தனித்துவம் கண்டறியதல்.
- மருத்துவம் மற்றும் ஆரோக்கியத்திற்காக உள்நாட்டு பசுக்களிடமிருந்து பிரதான தயாரிப்புகள்
- வேளாண் பயன்பாடுகளுக்கான உள்நாட்டு பசுக்களிடமிருந்து பிரதான தயாரிப்புகள்
- உணவு மற்றும் ஊட்டச்சத்துக்கான பொருட்களை உள்நாட்டு பசுக்களிடமிருந்து பெறுதல்.
- உள்நாட்டு பசுக்களிலிருந்து தேவைப்படும் அன்றாட அடிப்படை பொருட்கள் தயாரிப்பு.

### சிறந்த 100 பல்கலைக் கழகங்கள் பட்டியல்: சென்னை ஐஐடி

- பிரிட்டனிலிருந்து வெளியாகும் 'டைம்ஸ் ஹயர் எஜுகேஷன்' (டிஎச்இ) இதழ், இந்த ஆண்டுக்கான வளரும் பொருளாதார நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களை பட்டியலிட்டுள்ளது. இதில் 47 நாடுகளைச் சேர்ந்த 533 பல்கலைக்கழகங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 56 இந்தியாவைச் சேர்ந்தவை ஆகும்.
- இந்தப் பட்டியலில் உள்ள முதல் 100 பல்கலைக்கழகங்களில், சீனா 30 கல்வி நிறுவனங்களுடன் முதலிடத்தில் உள்ளது.
- 11 இந்திய கல்வி நிறுவனங்கள் இடம் பிடித்துள்ளன. குறிப்பாக இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் (ஐஐஎஸ்சி) 16-ம் இடத்தில் உள்ளது.

### தில்லியில் கைவினைப்பொருள் கண்காட்சி

- தில்லி ராஜபாதையில் மத்திய சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சகம் சார்பில் கைவினைப்பொருள் கண்காட்சி *'Hunar Haat'* நடைபெற்றது.
- பிப்ரவரி 23-ஆம் தேதி வரை நடைபெற்ற இந்த கண்காட்சியில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்துள்ள கைவினைக் கலைஞர்கள் தங்கள் படைப்புகளை காட்சிப்படுத்தியிருந்தனார்.

### இந்து குழுமத்தின் நான்காவது ஹடில் மாநாடு

- தி இந்து குழுமத்தின் வருடாந்திர சிந்தனை மாநாட்டை *(The Huddle)* குடியரசுத் தலைவர் துவங்கி வைத்தார். இந்த மாநாடு பெங்களூரில் பிப்ரவரி 22 அன்று நடைபெற்றது.

THE HINDU
the huddle
Conversations for Change

### நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு மாநாடு 2020

- நிதி ஆயோக் அமைப்பு வடகிழக்கு மாநிலங்களின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு மாநாட்டை அசாம் மாநிலத்தில் வரும் பிப்ரவரி 24 முதல் 26 வரை நடந்து முடிந்தது. அசாம் மாநில தலைநகரான கௌஹாத்தியில் நடைபெற்றது.
- வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், நாகாலாந்த், மணிப்பூர், மேகாலயா, அசாம், திரிபுரா, சிக்கிம் ஆகிய மாநிலங்கள் கலந்து கொண்டன.

### 'அனல் மின் உற்பத்தி: முந்தைய சாதனையை முறியடித்தது மத்திய பிரதேசம்

- அனல் மின் உற்பத்தியில் மத்திய பிரதேச மாநிலம் தனது சாதனையை முறியடித்து புதிய வரலாறு படைத்துள்ளது.
- மாநிலத்தின் அனல் மின் உற்பத்தி கடந்த ஆண்டு மார்ச் 25-இல் 1,074.5 லட்சம் யூனிட்டுகளை எட்டியதே சாதனையாக இருந்தது. இந்த நிலையில் நடப்பு ஆண்டு பிப்ரவரி 18-இல் 1,099.7 லட்சம் யூனிட் அளவுக்கு அனல் மின் உற்பத்தி செய்து புதிய வரலாறு படைக்கப்பட்டுள்ளது.

| அனல் மின் நிலையத்தின் பெயர் | யூனிட்டுகள் |
|---|---|
| சாஷயில் உள்ள அமர்கந்தாக் அனல் மின் நிலையம் | 50.6 லட்சம் |
| பிர்சிங்பூரில் உள்ள சஞ்சய்காந்தி அனல்மின நிலையம் | 289.6 |
| சாத்புரா அனல் மின் நிலையம் | 261.8 |
| கந்த்வா ஸ்ரீ சிங்காஜி மின் நிலையம் | 497.7 |

### 'தில்ஹான் திட்டம்"

- இந்திய அரசு எண்ணெய் வித்துகள் உற்பத்தியை அதிகரிக்க "தில்ஹான் திட்டத்தை" அறிமுகம் செய்துள்ளது. கடந்த பிப்ரவரி 19 அன்று மண்வள அட்டை தினம் கொண்டாடப்பட்டது. அதை முன்னிட்டு அரசு இத்திட்டம் அறிமுகம் செய்துள்ளது. இந்த அறிவிப்பை மத்திய வேளாண்மை துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் வெளியிட்டார். இந்தியா உலகின் நான்காவது பெரிய எண்ணெய் சார்ந்த பொருளாதாரத்தை கொண்ட நாடாகும்.

### ரயில் பயணாளிக்களுக்காக 'ASKDISHA' என்ற திட்டம் இந்தி மொழியில்

- இந்திய ரயில்வே கேட்டரிங் மற்றும் சுற்றுலாத்துறை கழகம் 'ASKDISHA' என்ற திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இந்த "ASKDISHA" மூலம் (எப்பொழுது வேண்டுமானாலும் உதவி தேடுபவர்களுக்கான டிஜிட்டல் தொடர்பு) என்பதாகும். இந்த உதவி ஹிந்தி மொழியில் வழங்கப்படும்.
- இந்த இந்திய ரயில் பயணிகளுக்கான உதவி கடந்த 2018ஆம் ஆண்டு Artificial Intelligence based ASKDISHA chatbot உருவாக்கப்பட்டது.

### Historical Gastronomica-The Indus Dining Experience

- டெல்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் 'Historical Gastronomica – The Indus Dining Experience' என்ற கண்காட்சி நடைபெற்றது. தேசிய அருங்காட்சியகம் ஒரு நிலையம் மில்லியன் கதைகள் என்ற அமைப்புடன் இணைந்து இக்கண்காட்சியை நடத்தியது.
- இது இந்தியாவின் பண்டைய உணவு வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு தனித்துவமான கண்காட்சி ஆகும். 5000 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தை சேர்ந்த பொருட்களை காட்சிப்படுத்தப்பட்டன.

### இந்தியாவின் முதல் மிதக்கும் படகுத்துறை மற்றும் குடியுரிமை அலுவலகம்

- மத்திய அமைச்சரான முக்கேஷ் மாண்டவியா அவர்கள் கோவா மாநிலத்தில் மாண்டவி ஆற்றில் இந்தியாவின் முதல் மிதக்கும் படகுத்துறை தொடங்கி வைத்தார். மேலும் கோவாவின் வாஸ்கோவில் நகரும் குடியுரிமை அலுவலகத்தையும் திறந்து வைத்தார்.

### மனதின் குரல் நிகழ்ச்சியில் அவ்வையாரின் வரிகளை மேற்கோள் காட்டி பிரதமர் மோடி உரை

- ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமையில், அகில இந்திய வானொலியில் “மனதின் குரல்“ நிகழ்ச்சியின் மூலம் பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு உரையாற்றி வருகிறார்.
- நாட்டின் சிறந்த தமிழ் பெண் புலவரான அவ்வையார், “கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு“ என எழுதி உள்ளார். நம் நாட்டின் பல்லுயிர் வளமும் இது போன்றதுதான். இதுபற்றி நமக்கு தெரிந்தவை சிறிய அளவுதான் தெரியாதவை மிக அதிகம் என்று மேற்கோள் காட்டியுள்ளார்.
- **மேகாலயவில் குகைகளில் புதிய வகை மீன்கள் சமீபத்தில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த மீன் குகைகளில் காணப்படும் நீவாழ் உயிரினங்களில் இது பெரியதாகவும், ஆழமான இருண்ட பகுதியில் இந்த மீன் வாழும் தன்மை கொண்டது. இந்த மீன் கண்பார்வையற்றது.**

### சர்வதேச நீதிமன்றம் மாநாடு 2020

- தில்லியில் ‘சர்வதேச நீதித்துறை மாநாடு-2020’ தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது.
- பிரதமர் நரேந்திர மோடி, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.போப்டே, மத்திய சட்டத்துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகள் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.
- இந்த மாநாட்டில் நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களையும் இணையவழியில் ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

### உலகின் மிகப்பெரிய வேளாண்மை பொருட்களை சேமிக்கும் கிடங்கு

- மும்பை விமான நிலையம் மற்றும் இந்திய விமானப்படை ஆணையம் இணைந்து உலகின் மிகப்பெரிய வேளாண்மை மற்றும் மருந்து பொருட்களை சேமித்து வைக்கும் கிடங்கை துவங்கி உள்ளது. இது உலகின் மிகப்பெரிய விமான நிலைய அடிப்படையிலான வெப்பநிலை கட்டுப்பாட்டு வசதி கொண்ட *(world’s largest airport-based temperature-controlled facility)* அமைப்பாகும். இது ”ஏற்றுமதி குளிர் மண்டலம்“ - ‘Export Cold Zone’ என்று அழைக்கப்படும். இதில் 700 டன் அளவு கொண்ட பொருள்களை சேமித்து வைத்துக்கொள்ள முடியும்.
- இது மும்பையில் உள்ள சத்தரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இந்த விமான நிலையம் நாட்டின் மிகப்பெரிய ஏற்றுமதி அமைப்புகள் கொண்ட விமான நிலையம் ஆகும்.

### இந்தியப் பறவைகளின் நிலை 2020

- சமீபத்தில் ‘இந்தியப் பறவைகளின் நிலை-2020’ என்ற அறிவியல் அறிக்கை வெளியிடப்பட்டது.
- ‘சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு அமைப்பு’ (ஐயூசிஎன்) வெளியிட்டிருக்கும் பட்டியலில் ‘குறைந்த கவனம் கோரும்’ பறவைகளில் சில இந்தியாவில் ஆபத்தான நிலையில் உள்ளன.
- பறவைகள் நிரம்பிய நாடாக இந்தியா இருந்தபோதும் அடையாளம் காணப்பட்ட 867 பறவை வகைகளில் 261 வகைகள் மட்டுமே முழு ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன.

- அவற்றுக்கு மட்டுமே நீண்ட காலத் தரவுகள் கிடைக்கின்றன. இவற்றில் 52% 'அதிக கவனம்' கோருபவையாகத் தற்போது வரையறுக்கப்பட்டிருக்கின்றன.




- குஜராத்தில் சமீபத்தில் நடந்த 'காட்டுயிர்களில் வலசை வரும் இனங்களைப் பாதுகாப்பது' குறித்த சர்வதேச மாநாட்டில், இந்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.
- மிகக் குறைந்த எண்ணிக்கையில் தற்போது இருக்கும் கானமயில்களைக் காத்து அவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பது முக்கியம்.
- கல்குருவிகள், வரகுக்கோழிகள் போன்றவற்றின் வாழிடங்களும் அழிக்கப்பட்டுவருகின்றன.

## 'UPI Chalega' முகாம்

- இந்திய தேசிய கட்டண கழகம் (National Payments Corporation of India) UPI Chalega' என்ற முகாமை தொடங்கி உள்ளது. இந்த முகாமின் முக்கிய நோக்கம் UPI-Unified Payments Interface பயனாளர்கள் சரியான முறையில் பயன்படுத்த வழிகாட்டுவது ஆகும்.
- மேலும் இந்த UPI chalega.com மூலம் பயனாளர்களின் நேரடி வங்கிகள் மற்றும் மூன்றாம் தரப்பு பயன்பாடுகளை பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள முடியும்.

## இந்திரா தனுஷ் திட்டம் 2.0

- சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷவர்தன் தடுப்பூசி திட்டமான இந்திரா தனுஷ் திட்டம் 2.0ஐ தொடங்கி வைத்தார். இதன் மூலம் நோய்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க இந்த தடுப்பூசி திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

## இந்தியாவின் மிக உயர்ந்த கப்பல் பாலம்



- இந்தியாவின் மிக உயர்ந்த கப்பல் பாலம் வடகிழக்கு ரயில்வே கட்டமைப்பு அமைப்பு கட்டியுள்ளது. மணிப்பூரின் தமெங்லாங் (Tamenglong) மாவட்டத்தில் மக்ரு ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்பட்டுள்ளது. இப்பாலம் 100 மீ உயரம் மற்றும் ரூ.283.5 கோடியில் கட்டப்பட்டுள்ளது.

## ஷயம் பிரசாத் முகர்ஜி நகர்ப்புற திட்டம்




- ஷயம்பிரசாத் முகர்ஜி நகர்ப்புற திட்டத்தின் நான்காம் ஆண்டு நினைவு பிப்ரவரி 21 கொண்டாடப்பட்டது. இத்திட்டம் கடந்த பிப்ரவரி 21, 2016 அன்று பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- உள்ளூர் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவது மூலம் அடிப்படை சேவைகளை மேம்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும்.

**இந்திய ஆர்கானிக் உணவுப் பொருள்களின் கண்காட்சி**

- புது தில்லி ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் மத்திய உணவுப் பதப்படுத்துதல் துறையின் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் உணவுப் பொருள்களின் கண்காட்சி தொடங்கியது.
- இக்கண்காட்சியை மத்திய உணவுப் பதப்படுத்துதல் துறை அமைச்சர் ஹர்சிம்ரத் கௌர் பாதல் மற்றும் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி தொடங்கி வைத்தனர்

**சனிக்கிழமைகளில் புத்தகப் பை வேண்டாம்**

- இனி சனிக்கிழமைதோறும் பள்ளிகளுக்கு மாணவர்கள் புத்தகப் பைகளைக் கொண்டு செல்ல வேண்டாம் என ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட் அறிவித்துள்ளார். அதற்கு பதிலாக, விளையாட்டு, நாடகங்கள், இலக்கிய வாசிப்பு, நடனம் உள்ளிட்டவற்றில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

**மூன்று நிமிடம் உடற்பயிற்சி செய்தால் இலவச பிளாட்பார்ம் டிக்கெட்**



- மூன்று நிமிட உடற்பயிற்சிக்கு இலவச பிளாட்பார்ம் டிக்கெட் வழங்கும் புதுமையான திட்டம் டெல்லி ஆனந்த் விஹார் ரயில் நிலையத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் ஃபிட் இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**100% எரிவாயு இணைப்பு பெற்ற முதல் மாநிலம்**

- மத்திய அரசின் பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா திட்டத்தின் படி 100% எரிவாயு இணைப்பு பெற்ற முதல் இந்திய மாநிலம் இமாச்சல பிரதேசம் ஆகும்.
- மத்திய அரசின் இத்திட்டத்தை அடிப்படையாக கொண்டு இமாச்சல பிரதேச மாநிலம் ‘Himachal Grihini Suvidha Yojana’ என்ற திட்டத்தை எரிவாயு இணைப்பு வழங்க கடந்த 2018ஆம் ஆண்டு அறிமுகம் செய்தது.

**பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா**

- கடந்த 2016 மே 1 அன்று பிரதமர் மோடி அறிமுகம் செய்தார்.
- உத்திர பிரதேச மாநிலம் பாலியா என்ற இடத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.
- இதன் மூலம் நாட்டில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள 5 கோடி மக்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்க வேண்டும் என்பதாகும்.

**”SPICe+” என்ற இணையத்தளம்**

- இந்திய அரசு ”SPICe+” என்ற இணைய சேவையை அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் 10 சேவைகள் இணைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தொழில் தொடங்குவதை எளிதாக்குவதற்காக இந்த இணைய சேவை தொடங்கப்பட்டுள்ளது.
- மத்திய கார்பரேட் விவகாரத்துறை அமைச்சகம் இந்த இணையத்தளத்தை அறிமுகம் செய்துள்ளது. எளிதில் தொழில் தொடங்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 63வது இடத்தில் உள்ளதாக உலக வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது.
- **ஆதார் அடிப்படையிலான பரிவர்த்தனை 28% தவறான வழியில் உள்ளது**

### ஆதார் அடிப்படையிலான பரிவர்த்தான 28% தவறான வழியில் உள்ளது

- நிதி ஆயோக் தேசிய ஊட்டச்சத்து திட்டத்தின் அறிக்கையை வெளியிட்டது. இதில் மூன்றில் ஒரு பங்கு ஆதார் அடிப்படையிலான பரிவர்த்தனைகள், பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா உட்பட தவறாக பயன்படுத்துவதாக நிதி ஆயோக் தெரிவித்துள்ளது.
- இந்த அறிக்கையை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சகம் தயாரித்தது. இதன்படி 28% ஆதார் அடிப்படையிலான பரிவர்த்தனைகள் தவறாக பயன்படுத்தப்படுகிறது. 66% மக்களே இதில் பயன் அடைகிறார்கள் என்று தெரிவித்துள்ளது.

### "அடல்" புதிய கண்டுபிடிப்புத் திட்டத்தின் கல்வி நிறுவனங்களுக்கு உதவ புதிய மையம்

- மத்திய அரசின் 'அடல்' புதிய கண்டுபிடிப்புத் திட்டத்தின் கீழ் (ஏஐஎம்) உயர் கல்வி நிறுவனங்களுக்கு உதவுவதற்காக 'சமூகத்துக்கு உதவும் புதிய கண்டுபிடிப்புக்கான அடல் மையம் (ஏசிஐசி)' என்ற புதிய மையம் உருவாக்கப்பட்டுள்ளது
- இந்த நிலையில், தொழில் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு (சிஎஸ்ஆர்) திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியை, இந்த புதிய கண்டுபிடிப்புத் திட்டங்களுக்கு வழங்க முடிவு செய்து, அதற்காக புதிய அடல் மையம் (ஏசிஐசி) ஒன்றும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

### ஒடிசாவில் டால்பின் எண்ணிக்கை குறைந்து

- ஒடிசாவில் கேந்திரபாரா மாவட்டத்தில் பிதர்னிகா தேசிய பூங்கா உள்ளது. 145 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ள இந்தப் பூங்கா, சதுப்புநிலக் காடுகள் மற்றும் அதுசார்ந்த உயிரினங்களுக்கு புகழ்பெற்றது.
- இங்கு டால்பின்கள் எண்ணிக்கை குறித்த கணக்கெடுப்பு கடந்த ஜனவரி 19-ம் தேதி மேற்கொள்ளப்பட்டது. இதன் அறிக்கை வெளியிடப்பட்டது.
- 2018ல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் டால்பின்கள் எண்ணிக்கை 307 ஆக இருந்தது. கடந்த ஆண்டு 126 டால்பின்கள் காணப்பட்ட நிலையில் இந்த ஆண்டு பாதிக்கும் கீழே குறைந்துள்ளது.

### தேசிய இணைய ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு மையம்

- மத்திய உள்துறை இணை அமைச்சர் கங்காபுரம் கிருஷ்ணாரெட்டி தேசிய இணைய ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு மையத்தை ஹைதராபாத்தில் திறந்து வைத்தார். நாட்டிற்கு எதிரான இணைய தாக்குதல்களை குறைக்கும் நோக்கில் இந்த மையம் துவங்கப்பட்டு உள்ளது.
- காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வாரியத்தால் இந்த மையம் அமைக்கப்பட்டு உள்ளது.
- இந்திய இணைய குற்றங்கள் ஒருங்கிணைப்பு மையத்தில் கீழ் செயல்படும் ஏழு மையங்களுடன் இணைந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

### தரவு மாதிரிகள் ஒருங்கிணைப்பில் குழும முறைகள் மாநாடு

- மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய இடைநிலை வானிலை முன்னறிவிப்பு மையம் (NCMRWF) 3 நாட்கள் சர்வதேச தரவு மாதிரிகள் ஒருங்கிணைப்பில் குழும முறைகள் மாநாட்டை உத்திரபிரதேசம் நொய்டாவில் நடத்தியுள்ளது.
- மத்திய சுகாதாரம் மற்றும் புவி அறிவியல் துறை அமைச்சர் ஹர்ஷவர்தன் இந்த மாநாட்டை துவங்கி வைத்தார்.

### பெருங்கடல் எச்சரிக்கை அமைப்பு

- ஹைதராபாத்தில் உள்ள இந்திய தேசிய பெருங்கடல் தகவல் சேவை மையம் 3 புதிய சிறப்பு மிகுந்த பெருங்கடல் எச்சரிக்கை அமைப்பை துவங்க உள்ளது.
- இந்த மையத்தின் மூலம் மீனவர்கள் மற்றும் மக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை அளித்து பேரிடர் காலங்களில் பாதுகாக்க பெரிதும் பயனுள்ளதாக அமையும்.

### புதிய மூன்று எச்சரிக்கை அமைப்பின் பெயர்களாவன

- சிறிய ஆலோசனை மற்றும் முன்னறிவிப்பு சேவைகள் அமைப்பு
- ஸ்வெல் முன்னறிவிப்பு அமைப்பு
- ஆல்கல் ப்ளூம் முன்னறிவிப்பு அமைப்பு

### பொதுப்பட்டியலில் உள்ள சட்டங்கள் ஜம்மு & காஷ்மீரில் அமல்

- ஜம்மு & காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கி வந்த அரசமைப்புச் சட்டத்தின் 370-ஆவது பிரிவு கடந்த ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் தேதி ரத்து செய்யப்பட்டதுடன், அந்த மாநிலம் இரு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டது. மேலும், அவ்விரு யூனியன் பிரதேசங்களும் கடந்த அக்டோபர் 31-ஆம் தேதி முதல் செயல்பாட்டுக்கு வந்தன.
- இந்நிலையில், பொதுப் பட்டியலில் கீழ் உள்ள 37 மத்திய சட்டங்களை ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் அமல்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இதற்கு முன்பு இந்தச் சட்டங்கள், ஜம்மு-காஷ்மீரைத் தவிர, நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களிலும் அமல்படுத்தப்பட்டிருந்தன.
- இந்தச் சட்டங்களை ஜம்மு-காஷ்மீரில் அமல்படுத்த முடியுமா என்று சந்தேகங்கள் நிலவி வந்த நிலையில், அதற்கு மத்திய அரசு தீர்வு கண்டுள்ளது. மேலும் ஜம்மு-காஷ்மீரின் தேவைக்கு ஏற்ப சற்று திருத்தங்களுடன் இந்த சட்டங்களை அமல்படுத்தவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### 2 நிறுவனங்களுக்கு தேசிய அந்தஸ்து

- தமிழகத்தின் தஞ்சாவூர், ஹரியானாவின் குந்த்லி ஆகிய நகரங்களில் உள்ள தேசிய உணவு தொழில்நுட்ப நிறுவனத்துக்கு தேசிய அந்தஸ்து வழங்கப்படும். இது தொடர்பான சட்டத்திருத்ததுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

### தேசிய தொழில்நுட்ப ஜவுளி ஆணையம்

- ஜவுளித் துறையை சர்வதேச அளவுக்கு தரம் உயர்த்தும் முயற்சியாக, ரூ.1,480 கோடியில் தேசிய தொழில்நுட்ப ஜவுளி ஆணையம் அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஆணையம் 2020-21-ஆம் நிதியாண்டு முதல் 2023-24-ஆம் நிதியாண்டு வரை செயல்படும்.

### முதல் செயற்கை நுண்ணிறிவு மாநாடு: RAISE-2020

- இந்திய அரசு முதல்முறையாக செயற்கை நுண்ணறிவு மாநாடு "RAISE-2020" என்ற பெயரில் டெல்லியில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டை இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகம் ஏற்பாடு செய்தது. RAISE 2020- Responsible Artificial intelligence (AI) for Social Empowerment என்பதாகும். இம்மாநாடு வரும் ஏப்ரல் 11-12ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது.

### *RAISE 2020* நோக்கம்

- இந்த உச்சி மாநாட்டில் செயற்கை நுண்ணறிவு மூலம் இந்தியாவின் சமூக தொழில் முனைவு ஊக்க மூட்டுதல் என்பதாகும்.

**ஜன் ஆரோக்கிய யோஜனாவின் கீழ் மக்கள் சிகிச்சை பெற மற்ற மாநிலங்களுக்கு அனுப்படுகின்றனர்**

- ஆயுஷ்மான் பாரத் திட்டம் என்று பிரபலமாக அறியப்படும் பிரதான் மந்திரி ஜன் ஆரோகிய யோஜனா இன் கீழ் அதிகபட்ச நோயாளிகளை சிகிச்சை பெற மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன.
- இதில் மத்திய பிரதேச மாநிலம் முதல் இடத்தில் உள்ளது. இதன் கீழ் பயன்பெற அண்டை மாநிலமான குஜராத்திற்கு நோயாளிகளை அனுப்புகிறது. இந்த அறிக்கையை தேசிய சுகதார ஆணையம் வெளியிட்டுள்ளது.

**Treds பாதுகாப்பு பணியாளர்களுக்கான முதல் அரசு நிறுவனம்**

- இந்தியாவின் பாதுகாப்பு பணியாளர்களுக்கு, அரசுக்கு சொந்தமாக ஆயுதங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் முதல்முறையாக Treds என்ற தனியார் நிறுவனங்களுடன் இணைந்துள்ளது. Treds என்பது சிறிய விற்பனையாளர்களுக்கு மூலதனத்தை உருவாக்கும் நிறுவனமாகும்.
- இதன் மூலம் மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் 41 வெடிபொருள் தயாரிக்கும் நிறுவனங்கள் இணைந்துள்ளது. மேலும் இதன் மூலம் சிறு, குறு, நடுத்தர தொழில்துறைக்கு வேலைவாய்ப்பு மற்றும் மூலதனம் அதிகரிக்கும்.

**2024-க்குள் ராணுவத் தளவாட ஏற்றுமதி ரூ. 35,000 கோடியை   ட்டும்**

- பெங்களூரு ஹெச்எஎல் ஆலையில் இலகு ரக தாக்குதல் ஹெலிகாப்டரை பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார்.
- 2024ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் ஆண்டு ராணுவத் தொழிலின் ஏற்றுமதி தற்போதுள்ள ரூ.17 ஆயிரம் கோடியில் இருந்து ரூ.35 ஆயிரம் கோடியை எட்டும் எனவும் இந்தியாவின் ராணுவத் தளவாட ஏற்றுமதி வேகமாக வளர்ந்துவருகிறது என்றும் தெரிவித்தார்.
- ‘இந்தியாவில் உற்பத்தி செய்வோம்’ திட்டத்தில் ராணுவத் தளவாட நிறுவனங்கள் பங்காற்றினால், இந்தியாவின் பொருளாதாரம் மேலும் உயரும் என்றார்.
- பெங்களூரில் இந்துஸ்தான் வானூர்தி நிறுவனத்தின்(எச்.ஏ.எல்.) சார்பில் நடைபெற்ற கன்னட கலை விழாவில் ராஜ்நாத்சிங் பங்கேற்கிறார்.

**மண்டல கவுன்சில் கூட்டம்**

- கிழக்கு மண்டல கவுன்சிலில் பிஹார், ஜார்கண்ட், ஒடிசா, மேற்குவங்கம் உறுப்பினர்களாக உள்ளன. இந்த கவுன்சிலின் கூட்டம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் புவனேஷ்வரில் நடைபெற்றது.

**“நவீன கிராம் யோஜனா”**

- மகராஷ்டிரா மாநிலத்தின் நவீன கிராம் யோஜனா (Smart Gram Yojana) திட்டத்திற்கு அம்மாநில முன்னாள்துணை முதலமைச்சரான ரோசா ஹேப்ராம் ராவ் பாட்டீல் அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

***Smart Gram Yojana***

- மகாராஷ்டிரா மாநில அரசால் கடந்த 2016ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- இதன் முக்கிய நோக்கம் தாலுகா மற்றும் மாவட்ட அளவில் உள்ள கிராம பஞ்சாயத்துகளின் செயல்திறனை அதிகரித்தல் என்பதாகும்.

**உலகத் தமிழ்ச் சங்கங்களின் மாநாடு**

- மதுரையில் வரும் மார்ச் இறுதியில் உலகத் தமிழ்ச் சங்கங்களின் மாநாடு நடைபெற உள்ளது என்று தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் க.பாண்டியராஜன் தெரிவித்தார்.
- உலகளவில் தமிழில் உள்ள 147 அகராதிகளை ஆய்வு செய்ததில், தமிழில் 4 லட்சத்து 12 ஆயிரம் சொற்கள் தனித்துவம் மிக்கவையாக இருக்கின்றன. மேலும், சொற்குவை திட்டத்தின் மூலம், இதுவரை 1000 புதிய சொற்கள் கண்டறியப்பட்டுள்ளன.

உலக தமிழ் சங்கம்

- தமிழ்மொழி வளர்ச்சிக்கும் ஆய்வுக்கும் தமிழ்நாடு அரசால் மதுரையில் அமைக்கப்பட்டிருக்கும் அரசு நிறுவனமாகும்.
- மார்ச் 1, 2016ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- 1981 ஆம் ஆண்டு மதுரையில் நடத்தப் பெற்ற உலகத்தமிழ்மாநாட்டில்அப்போதையதமிழக முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரன் மதுரையில் உலகத் தமிழ்சங்கம் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பை வெளியிட்டார்.
-

# 7 சர்வதேச நிகழ்வு



### உலகளாவிய சாலை பாதுகாப்பு அமைச்சர்கள்




- உலகளாவிய சாலை பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டின் மூன்றாவது பதிப்பு ஸ்வீடன் நாட்டின் ஸ்டாக்ஹோம் என்ற நகரில் நடைபெற்றது. மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர அமைச்சர் நிதின் கட்காரி இந்தியா சார்பாக கலந்து கொண்டார். இந்த மாநாட்டின் மையக்கருத்து *'Achieving Global Goals 2030'* என்பதாகும்.
- இந்த மாநாட்டை உலக சுகாதார அமைப்பு இணைந்து ஏற்பாடு செய்தது.

### ஃப்ளு பொருளாதார கூட்டமைப்பு



- இந்தியா-நார்வே நாடுகளுக்கு இடையே நீடித்த நிலையான வளர்ச்சிக்கான ஃப்ளு பொருளாதார கூட்டமைப்பு நடைபெற்றது. இந்நாடுகளுக்கு இடையே ஒருங்கிணைந்த கடல் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி சம்பந்தமான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.


# 8 தமிழ்நாடு



### காலை உணவு வழங்கும் திட்டம் விரிவாக்கம்

- சென்னை மாநகராட்சியுடன், 'அட்சய பாத்திரா' பவுண்டேஷன் இணைந்து, மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுவழங்கும் திட்டதை செயல்படுத்தி வருகிறது.
- மத்திய அரசு தேசிய ஊட்டச்சத்து திட்டத்தை 6 வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் பெண்கள் மத்தியில் செயல்படுத்தியுள்ளது.
- 'அட்சய பாத்திரா' பவுண்டேஷன் சார்பில் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்துக்காக, சென்னை கிரீம்ஸ் சாலையில் அமைய உள்ள சமையல் கூடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இதில் தமிழக ஆளுநர், முதல்வர், துணை முதலமைச்சர் கலந்து கொண்டனர்.

### சென்னையில் ஒருங்கிணைந்த தானியங்கி சிக்னல் விரைவில் அறிமுகம்



- சென்னை போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் வகையில் அண்ணா சாலை உள்பட 7 சாலைகளில் ஒருங்கிணைந்த தானியங்கி சிக்னல் *(Integrated Automatic Signal)* விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.
- புதுதில்லிக்கு அடுத்தப்படியாக சென்னையிலேயே அதிக எண்ணிக்கையில் வாகனங்கள் உள்ளன.

**ஒருங்கிணைந்த சிக்னல்:**

- பிரிட்டன், இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளிலும், வளைகுடா நாடுகளிலும் ஒருங்கிணைந்த தானியங்கி சிக்னல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- இந்த திட்டத்தின்படி, ஒரு சாலையில் உள்ள அனைத்து சிக்னல்களும் தொடர்பில் இருக்கும்.

### மகப்பேறு இறப்பு (maternal mortality rate)

- மாநில சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பின் (HMIS) தகவல்படி 2019ல் தமிழ்நாட்டின் மகப்பேறு இறப்பு விகிதம் ஒரு லட்சம் குழந்தைகளில் பிறப்பு விகிதத்தில் 57ஆக குறைந்துள்ளதாக தெரிவித்துள்ளது.
- கடந்த 2018ஆம் ஆண்டில் மகப்பேறு இறப்பு விகிதம் ஒரு லட்சம் குழந்தை பிறப்புக்கு60ஆக இருந்தது.

### நிறைவேறியது காவிரி வேளாண் மண்டல சட்ட மசோதா

- காவிரி ஆற்றுப் படுகைகளில் உள்ள வேளாண் நிலங்களை பாதுகாப்பதற்கான வேளாண் மண்டல சட்ட மசோதா சட்டப்பேரவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

**எதற்கெல்லாம் தடை:**

- காவிரி ஆற்றுப் படுகைகளில் சில முக்கியத் தொழில்களுக்கு தடை விதிக்கப்படுகிறது.

- துத்தநாக உருக்காலை, இரும்புத்தாது செயல்முறை ஆலை, ஒருங்கிணைந்த எஃகு ஆலை அல்லது இளகு இரும்பு ஆலை, செம்பு மற்றும் அலுமினியம் உருக்காலைகள், விலங்குகளின் எலும்பு, கொம்பு, குளம்புகள் மற்றும் பிற உடல் பாகங்களைப் பதப்படுத்துதல், தோல் பதனிடுதல், எண்ணெய் மற்றும் நிலக்கரி படுகை மீத்தேன், மென்களிக்கல் எரிவாயு, பிற ஒத்த ஹைட்ரோகார்பன்கள் உள்ளடங்கிய இயற்கை வாயுக்களின் ஆய்வு, துளைத்தல், பிரித்தெடுத்தல், கப்பல் உடைக்கும் தொழிற்சாலை ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்படுகிறது.

**எங்கெல்லாம் பொருந்தும்:**

- முழுமையான காவிரி டெல்டா மாவட்டங்களாகத் திகழும் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலும், கடலூர் மாவட்டத்தின் காட்டுமன்னார்கோவில், மேல்புவனகிரி, கீரப்பாளையம், பரங்கிப்பேட்டை, குமராட்சி வட்டங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தின் அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, திருவரங்குளம், கறம்பக்குடி வட்டங்கள் ஆகிய இடங்களுக்குத் தடை பொருந்தும்.

**தண்டனை:**

- ஐந்து ஆண்டுகள் வரை அதிகபட்சமாகவும், ஆறு மாதங்களுக்குக் குறையாமலும் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.
- ரூ.50 லட்சம் வரை அதிகபட்சமாகவும், ரூ.10 லட்சத்துக்குக் குறையாத வகையிலும் அபராதம் விதிக்கப்படும்.
- முதல்வர் தலைமையில் தனி அதிகார அமைப்பு
- சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கென தனியான அமைப்பு உருவாக்கப்படுகிறது.
- தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல அதிகார அமைப்பு என்ற பெயரில் முதல்வரைத் தலைவராகக் கொண்டு தனி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**மாவட்டக் குழு:**

- அதிகாரம் பெற்ற அமைப்புக்கு உதவுவதற்காக மாவட்ட அளவில் குழு அமைக்கப்படுகிறது.
- மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைக்கப்பட்ட இரண்டு விவசாயிகளும் குழுவில் இடம்பெறுவர்.

### “ஒரு ஆய்வகம்-ஒரு பள்ளி” என்ற திட்டம்

- சென்னை ஐஐடி-யின் ‘ஒரு ஆய்வகம் - ஒரு பள்ளி’ என்ற திட்டத்தின் கீழ் வெரிசோன் இந்தியா நிறுவனத்தின் நிதியுதவியுடன், இந்த விழிப்புணர்வு வழிகாட்டுதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- பள்ளி மாணவர்களிடையே ஆராய்ச்சி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தோடு, சென்னை ஐஐடி-யின் 20 ஆராய்ச்சி ஆய்வகங்கள் 20 கிராமப்புற அரசு பள்ளிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.
- அடுத்து 2020-21 கல்வியாண்டில் இந்தத் திட்டம் மேலும் 15 பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.
- பள்ளி மாணவர்களுக்கு மிகுந்த பயனுள்ள இந்தத் திட்டம், இரண்டாம் ஆண்டாக இப்போது நடைபெற்று வருகிறது.

### சுயஉதவிக் குழு விவரம், செயல்பாடுகளை மின்னணு முறையில் புதிய “இ-சக்தி” திட்டம்

- சுயஉதவிக் குழுக்களின் வங்கிக் கணக்குகள் உள்ளிட்ட அனைத்து செயல்பாடுகள் குறித்த விவரங்களை மின்னணுமயமாக்கி பராமரிப்பதற்கு வசதியாக இ-சக்தி என்ற திட்டம் தமிழகத்தில் முதல்கட்டமாக 4 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.
- சுயஉதவிக் குழுக்களின் வங்கிக் கணக்குகள் உள்ளிட்ட அனைத்து செயல்பாடுகள் குறித்த விவரங்களை மின்னணு மயமாக்கி பராமரிப்பதற்கு வசதியாக இ-சக்தி என்ற திட்டம் கடந்த2015-ம் ஆண்டு ஜார்க்கண்ட் மாநிலம் ராம்கர்க் மற்றும் மகாராஷ்டிர மாநிலம் துலே ஆகிய 2 நகரங்களில் முன்னோடித் திட்டமாக தொடங்கப்பட்டது.

- தற்போது, நாடு முழுவதும் 22 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 200 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இ-சக்தி என்ற திட்டம் நபார்டு வங்கிமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தமிழகத்தில் இ-சக்தி திட்டம், தமிழக அரசு மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து முதல்கட்டமாக திருவண்ணாமலை, விருதுநகர், நாமக்கல், நாகை மாவட்டங்களில் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.

### பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினம்

- பெண் குழந்தைகளுக்காக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆற்றிய சேவையை நினைவுகூரும் வகையில் அவரது பிறந்த நாளான பிப்ரவரி 24-ஆம் தேதியை ஆண்டுதோறும் மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாகத் தமிழக அரசு கொண்டாடியது.

### சென்னை-குமரி வழித்தடத்தில் 5 இடங்களில் தொழில் மையம்

- சென்னை-பெங்களூரு தொழில் வழித்தடத்தில் பொன்னேரி பகுதியில் தொழில் மையம் அமைப்பதற்காக தேசிய தொழில் வழித்தடமேம்பாடு மற்றும் செயலாக்க கழகத்துக்கும் தமிழக அரசின் டிட்கோ (TIDC - Tamil Nadu Industrial Development Corporation) நிறுவனத்துக்கும் இடையில் ஒப்பந்தம் சென்னையில், முதல்வர் பழனிசாமி முன்னிலையில் கையெழுத்தானது.
- சென்னை-பெங்களூரு தொழில் வழித்தடத்தை பொறுத்தவரை மத்திய அரசு நிதி அளிக்கிறது. இத்திட்டதகை கொச்சி வரை நீட்டிக்க மத்திய அரசு ஒப்பதல் அளித்துள்ளது.
- சென்னை-கன்னியாகுமரி தொழில் வழித்தடம் சென்னை முதல் கன்னியாகுமரி வரை பல மாவட்டங்களை இணைக்கும் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ், தூத்துக்குடி, திருநெல்வேலி, மதுரை, விருதுநகர், தேனி மாவட்டங்களில் புதிய தொழில் மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

### வணிக நிறுவனங்களில் தூய தமிழ் திட்டம்

- தமிழக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்கத்தின் சார்பில் உலகத் தாய்மொழி நாளை முன்னிட்டு "வணிக நிறுவனங்களில் தூய தமிழ் திட்டம்" என்ற புதிய திட்டம் சென்னையில் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தின்படி, உணவகங்கள், ஜவுளி நிறுவனம், மளிகைக்கடை என எந்தவொரு நிறுவனமாக இருந்தாலும் அதில் பணியாற்றும் ஊழியர்கள், நிர்வாகிகள் தங்களது வாடிக்கையாளர்களிடம் மாதந்தோறும் 21-ஆம் தேதி கட்டாயமாக தூய தமிழில் பேச வேண்டும்.

### தென்னிந்தியாவின் முதல் தங்க நகை தொழிற்பூங்கா

- தென்னிந்தியாவிலேயே முதல்முறையாக தங்க நகைக்கென கோவையில்தான் தொழிற்பூங்கா அமைய உள்ளது.
- இதன் மூலம்கோவை தங்க நகை உற்பத்தி கேந்திரமாக (ஜுவல் ஹப்) மாறுவதுடன், ஏற்றுமதி, வேலைவாய்ப்பு அதிகரிக்கும் என்றும் பொற்கொல்லர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.
- மும்பைக்கு அடுத்தபடியாக கோவைதான் தங்க நகை தொழிலில் பிரசித்தி பெற்று விளங்குகிறது. கோவையில் தயாரிக்கப்படும் நகைகள், பல்வேறு மாநிலங்கள் மட்டுமின்றி, அமெரிக்கா, ஐரோப்பா, வளைகுடா நாடுகள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.